தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

துணர்	திருவள்ளுவர் யாண்டு ௲௯௱௯௰௫	மலர்
௪௰	குரோதி, ஆவணி. 1964 ஆகஸ்டு, செப்டம்பர்.	௫.

வாழ்க்கையும் இலக்கியமும்

கு. சிவமணி எம். ஏ., பி. டி.

இலக்கியம் உணர்வாக அமைந்து உள்ளத்திலேயே அடைந்து கிடத்தலுமுண்டு; அறிவாக வெளிப்பட்டுத் தோன்றலுமுண்டு; செயலாக மலர்ந்து சிறத்தலுமுண்டு. உணர்வு நிலையில் இலக்கியம் எல்லோருள்ளத்தும் ஒளிந்து கிடக்கின்றது. அறிவு நிலையில் நூல்களாக நிலைக்கின்றது; செயல் நிலையில் அறிவியலாக உலவுகின்றது.

மனவுணர்வுடையோரே மக்களாவர்; ஏனையோர் மாக்கள் என்று கருதப்பெறுவர். மக்களாகப் பிறந்தார் ஒவ்வொருவரும் தத்தமக்கேற்ற இலக்குகளைக் கொண்டு வாழ்கின்றனர். உலகில் பல்வகை மக்கள் வாழ்கின்றனர் 'உலகம் பலவிதம்' என்பது பழமொழி. பலவேறுபட்ட இலக்குக்களை, அஃதாவது குறிக்கோள்களைக்கொண்டு இவ்வுலகில் மக்கள் இயங்குகின்றனர் என்பதே அதன் கருத்தாகும்.

உலகில் வாழும் மக்களை ஊன்றிப் பாருங்கள். அவர்கள் வாழ்க்கையை இலக்குக்களே இயங்குகின்றன என்பது புலனாகும். எத்தனை வகையினர்? எத்தனை இலக்குக்கள்? உழைப்போர் உழைப்பின் பயனை அடையவேண்டும் என்று எண்ணுகின்றனர். செல்வர் மேலும் தமது சேமிப்புக்கூடவேண்டுமே என்று கவல்கின்றனர். கலைஞர் கலையினால் மக்களிடம் நல்ல கருத்துக்களைப் பரப்பிப் பாராட்டைப்பெற விரும்புகின்றனர். வாழ்க்கைப் போரில் போராடிப் போராடி முன்னேற முடியாமல் நடைப்பிணமாக நாட்களைக் கழிக்கும் சமுதாயத்தின் முதுகெலும்பு போன்றவர்கள் வாழ்க்கைச் சுமையால் கூனிப்போன தங்கள் முதுகினை நிமிர்த்தி நேரே நடக்க முயல்கின்றனர். ஆசிரியர் அறிவென்னும் ஒளி விளக்கை அணையாது காக்கின்றனர். அரசியல் தொண்டர்களை எடுத்துக் கொள்ளுங்கள். தொண்டை கிழியத் தங்கள் கட்சியினர் சாதித்தவற்றைக் கூப்பாடு போடுவதையே அவர்கள் தங்களது குறிக்கோளாகக்கொண்டுள்ளனர்.

மாற்றுக்கட்சியினர் அவர்களது குறிக்கோள்களில் ஓட்டை உடைசல் இருக்கின்றனவா என்று பூதக்கண்ணாடி வைத்துப்பார்த்துச் சிறிய வற்றையும் பெரிதாக மிகைப்படுத்திப் பறைசாற்றுகின்றனர்.

எழுத்தாளர்களுக்கு நாட்டில் குறைவே இல்லை. இருவர்களுள் சேர்ந்தாற்போல் பிழையின்றி எழுதத் தெரியாதவர்களும் எழுத்தாளர்கள் என்று பெயர் தாங்குகின்றனர். சில எழுத்தாளர்கள் எழுதியவற்றைப் படிக்கும்போது '' நாம் தமிழ்தான் படிக்கின்றோமா '' என்ற ஐயம் நமக்கே ஏற்படுகின்றது. அதற்குக் காரணம் அவர்களது மொழி நடை. வரையறையின்றிப் பிறமொழிச் சொற்களை அப்படியே அவர்கள் கையாளுகின்றனர். தமிழ் எழுத்தாளர்கள் தமிழில் எழுதினால்மட்டும் போதாது. தமிழை நன்றாகவும் படிக்கவேண்டும். மொழிப் பயிற்சியும் இலக்கியப் பயிற்சியும் அமைந்தால்தான் அவர்களால் நல்ல இலக்கியப் படைப்புக்களை உருவாக்க முடியும். நாட்டிலே தங்களது எழுத்துக்கள் பெரும் கருத்துப் புரட்சியைச் செய்யாமற்போயினும் நாலு பேருடைய பாராட்டையாவது பெற்றால் போதும் என்னும் இலக்கோடு இன்றைய எழுத்தாளர்கள் எழுதிக் குவிக்கின்றனர்.

இசைஞர் பாடு பலருக்கு இசையாப்பாடு. கூட்டம் இருந்தாலும் எழுந்து சென்றாலும் தங்கள் கண்களை மூடிக் கொண்டு தமக்குத் தெரிந்தவற்றைப் பாடித் தீர்க்கும் இசைஞர்களும் உண்டு; நாளும் தமிழிசை பரப்பும் நல்ல இசைவாணர்களும் உண்டு. சொற்பொழிவாளரைப்பற்றியோ சொல்லி முடியாது. பேசுவதைக் கேட்காமல் கூட்டத்தினர் தங்களுக்குள் பேசிக்கொண்டிருந்தாலும் அந்த இரைச்சலுக்குமேல் முன்னை ஒலி பெருக்கி இருப்பதையும் மறந்து கத்திப்பேசும் பேச்சாளர்கள் மிகுதியாக உள்ளனர். இருப்பினும் இவர்களது இலக்கு எப்படியாவது மக்களின் மதிப்பைப் பெற வேண்டுமென்பதே.

பட்டம் பெற வேண்டுமென்னும் ஆசை சிலருக்கு! பதவி உயர வேண்டுமென்னும் பரபரப்புப் பலருக்கு! எட்டியமட்டும் சுரண்ட வேண்டும் என்னும் எண்ணம் சிலருக்கு! எல்லாவற்றையும் தமதுடைமையாகக் கொள்ளும் மனப்பான்மை சிலருக்கு! ஏய்ப்போரும் உண்டு! ஏய்க்கப்படுவோரும் உண்டு! இல்லார்தாரும உண்டு! இருப்போரும் உண்டு! மக்களாகப் பிறந்தார் யாவராயினும் ஏதோ ஒரு குறிக்கோளைக் கொண்டு வாழ்கின்றனர். எவர் வாழ்வில்தான் இலக்கு இல்லை? குறிக்கோளைக கொண்டதுதானே இலக்கியம். அப்படியாயின், மக்கள் வாழ்க்கையில் அவர்கள் அறிந்தோ அறியாமலோ இலக்கியம் ஒன்றிப்போயிருக்கின்றது என்பதுதானே பொருள். வேண்டுமாயின் ஒருவரது இலக்கு மற்றவருடைய இலக்கோடு இயையாமல் இருக்கலாம். ஒப்பிட்டுப் பார்க்கும்போது சிறப்பற்றதாக இருக்கலாம். இன்னும் சொல்லப்போனால் ஒருவரது இலக்கு மற்றவரது வாழ்வையே இரையாகக் கொள்ளலாம். அவ்விலக்கை

அறநெறி படரா இலக்கு என்று கூறலாமே தவிர அஃது இலக்கன்று என்று விலக்கித் தள்ளிவிட முடியாது. ஆகவே இலக்கின் அடிப் படையில்தான் உலகே இயங்குகின்றது. இலக்கியம் மக்கள் உயிரோடு உயிராக ஒன்றிக் கிடக்கின்றது. இலக்கியத்தை மக்களிட மிருந்து பிரிக்க இயலாது.

இலக்கியம் என்னும் சொல்லைக் கேட்டவுடனேயே பற்பலரும் அதனை அடைய இயலாததொன்ருகக் கருதுகின்றனர். வாழ்க்கைக்கு பயன் தராதது என்று தள்ளுகின்றனர்; வாழத் தெரியாதவர்களுக்கு வாய்த்த வைப்பு என்று எண்ணுகின்றனர்; 'இலக்கியம் சோறு போடுமா' என்று துணிவாக வினவுகின்றனர்; இலக்கியம் படித்துத் தான் வாழவேண்டுமா? என்று கூறி ஒதுக்குகின்றனர். இதற்கெல் லாம் காரணம் இலக்கியம் என்னும் சொல்லுக்கு அவர்கள் கொண்ட பொருளே ஆகும்; இலக்கியத்தை ஒரு சிறு எல்லைக்குள் அடக்கி வைத்து அதன் விரிவையும் அடிப்படையையும் அவர்கள் உணரா மையே ஆகும். இலக்கியம் என்றவுடனேயே இவர்கள் நினைவில் தோன்றுவன புத்தகக் குவியல்களே ஆகும். புத்தகக் குவியல்களே இலக்கியம் என்று கொள்ளல் பொருந்தாது. புத்தகக் குவியல்களும் இலக்கியங்களே! ஆனல் அவை இலக்கியத்தின் ஒரு துறை வெளிப்பாடு.

கல்வி என்று சொன்ன அளவிலேயே பாடப்புத்தகங்களும் தேர்வுகளும் நமது மனக்கண்முன் எழுகின்றன. வெறும் பாடப் புத்தகங்களும் தேர்வுகளும் மட்டும் கல்வி ஆகா. கல்வியின் இலக்கை எய்துதற்கு அவையும் துணை செய்கின்றன. ஆனல் அவை கல்வியை முழுமையாக்குவதில்லை. துணைக் கூறுகளை முழுமைப் பொருளாக எண்ணி மயங்குகின்ற மயக்கம் பொதுவாக எல்லோருக்கும் எழுதல் இயல்பு. எவ்வாறு கல்வி என்றவுடனேயே பாடப்புத்தகங்களும், தேர்வுகளும் நினைவில் எழுகின்றனவோ அவ்வாறே இலக்கியம் என்றவுடனேயே புத்தகக் குவியல்கள் எண்ணத்தில் மின்னுகின்றன. அவற்றை மட்டும் இலக்கியம் என்று கொண்டோமாயின் இலக்கியத்தைச் சிறு அறைக்குள் வைத்துச் சிறைசெய்த பழி நமக்குவந்தெய்தும். இலக்கியத்தின் விரிவான பொருள் நமக்குப் புலப்படாது. இலக்கியம் புத்தகத் தொகுப்புள்ளே மட்டும் புதைந்து கிடப்பதன்று. ஏனென்ருல் புத்தகங்கள் கூறும் கருத்துக்கள் அனைத்தும் வாழ்க்கையோடு ஒட்டியவை என்று கொள்ள முடியாது. உலகியல் வழக்கம் புலனெறி வழக்கம் இரண்டின் இணைப்பாக அவை எழுகின்றன. அவற்றுள் வாழ்க்கை க்கு வழிகாட்டும் உண்மைகள் சில; புனைந்துரைகள் சில; பொய்ம்மை யையும வாய்மையாகக் கொண்ட உணர்வுகள் சில; கற்பனை கலந்தவையும் சில. இலக்கியம் புத்தகத் தொகுப்புள் மட்டுமில்லை, அது வாழ்வின் எல்லா நிலைகளிலும் நீக்கமற நிறைந்துள்ளது. மனித இதயத்தின் குரல்தான் இலக்கியம். ஒவ்வொருவர் நெஞ்சத் துள்ளும் அதுநிலைத்துள்ளது; வாழ்க்கையை நெறிப்படுத்துகின்றது.

வளப்படுத்துகின்றது. ஆகவே மனிதருக்கு அப்பாற்பட்டதாக அமையாமல், இலக்கியம் மனிதருள் மனிதராகவே இயங்குகின்றது.

இலக்கியத்தைப் பற்றிப் பிறழ உணர்ந்தோரே "இலக்கியம் சோறு போடுமா?" என்று வினவுகின்றனர். இலக்கினைக்கொண்ட வாழ்க்கையே வாழ்க்கையை ஒன்றாக உணர்ந்து, தெளிந்து, வாழும் நெறியை வரையறுத்து வாழுதல் கூடும். வாழ்க்கை நெறியை உணர்ந்தோரின் வாழ்க்கையே வையத்தில் வளமாக அமைதல் கண்கூடு. ஆகவே சோற்றிற்கும் அடிப்படையாக அமைவது இலக்கியமே ஆகும். இலக்கின்றிச் செல்லும் வாழ்க்கை அடிப்படைத் தேவைகளையும் எய்தப்பெறாது வருந்துதலை உலகியலில் நாம் காணுகின்றோம்.

"இலக்கியம் படித்துத்தான் வாழவேண்டுமா?" என்னும் வினாவையும் பலர் கேட்கத் தலைப்படுகின்றனர். இலக்கியம் படித்துத்தான் வாழ வேண்டுவதில்லை படிக்காமலும் வாழலாம். அந்த வாழ்க்கை வெறும் உணர்வு வாழ்க்கையாகத்தான் அமையுமே தவிர, அறிவுடன் இயைந்த வாழ்க்கையாக அமையாது. வள்ளுவர் மொழியில் கூறினால் அது விலங்கு வாழ்க்கை "படிக்காமல் எண்ணற்றோர் இன்றைய உலகில் வாழவில்லையா?" என்று பலர் கேட்கலாம். படிக்காமல் வாழ்வோரிடமும் இலக்கு உண்டு. அவர்களிடம் மரபு வழியே இலக்கிய உணர்ச்சி அமைந்து கிடக்கின்றது. இலக்கியம் வாழ்க்கையையே அடிப்படையாகக் கொண்டு எழுவது; வாழ்க்கையோடு வளர்வது, நல்ல இலக்கியம் வாழ்வு அழிந்தாலும் காலத்தையும் வென்று நின்று வாழ்வது. காலத்தையும் வென்று வாழும் இலக்குக்களே பழக்கங்களாகவும் பின் வழக்கங்களாகவும் மலர்கின்றன. அவ்வழக்கங்களே எல்லோர் உள்ளத்தில் நிலைக்கின்றன. பாமரர் உள்ளத்தில் வழிவழியாக வரும் மரபு நிலையில் அவை போற்றப்பெறுகின்றன. படித்தவர் நெஞ்சில் ஆய்வு முறையில் அவ்வழக்கங்கள் நின்று வலிமையும் வளமும் பெறுகின்றன. ஆகவே வளரும் இனத்தினரின் மனத்தில் இலக்கிய உணர்ச்சி ஊறிக் கிடக்கின்றது. படிக்காதார் வாழ்க்கையில் இலக்கியம் இயற்கையில் வளரும் பயிரைப் போன்றது. மழை பெய்தால் பயிர் வளரும்; பயன் தரும். விளைவன எல்லாம் பயன் தருவன என்று கொள்ளமுடியாது. பயிரும் உண்டு; களையும் உண்டு. படித்தவர் வாழ்க்கையில் இலக்கியம், பண்படுத்தலால் வளரும் பயிரைப் போன்றது; உரிய காலத்தே நிலந்திருத்தி, நீர்பாய்ச்சி, எருவிட்டுக் களை கட்டுப் பயிர் வளர்த்துப் பயன் கொள்ளுதலைப் போலாகும். ஆகவே இயற்கையாகவே எல்லோர் வாழ்விலும் இலக்கியம் பின்னிக் கிடக்கின்றது. வாழ்வின் இலக்குக்களுக்கேற்றவாறு பயன் மாறுபடுகின்றது. ஆகவே இலக்கியம் படித்துத்தான் வாழவேண்டுமா என்னும் வினாவே தவறுடையதாகின்றது.

"ஆன்", சாரியையாக வழங்குதல் உண்டா ?

வித்துவான் மோ. இசரயேல் எம். ஏ., டிப் (செர்மன்);
தமிழ் ஆய்வுத்துறை, சென்னைப் பல்கலைக் கழகம்.

தமிழ் இலக்கண நூலார் குறிப்பிடும் சாரியைகளில் " ஆன் " உம்[1] ஒன்று. தொல்காப்பியனார் " ஆன் " சாரியை வழங்கும் இடங்களையும் எடுத்துக்காட்டி உள்ளனர்; ஆனால் நன்னூலார் அது வழங்கும் இடங்களைக் குறிப்பிட்டிலர். இதனை இலக்கண நூலார் ஒரு சாரியை எனக்குறிப்பிட்டுள்ளனரே யொழிய எவ்விடத்திலும் சாரியையாக வழங்கிற்றிலர்.

சாரியைகளும் வேற்றுமை உருபுகளும்

இலக்கண நூலார் குறிப்பிட்டுள்ள சில சாரியைகள் வடிவில் வேற்றுமை உருபை ஒத்துள்ளன. (இன், அத்து, ஆன்), பல வேற்றுமைப் பொருளில் வழங்குகின்றன. சாரியைகள் பெயர்ச் சொற்கும் வேற்றுமை உருபுக்கும் இடையே வழங்கும்போது பொருளற்றவெற்றுருபாக (empty morph) உள்ளன. ஆனால் பிற இடங்களில் இலக்கண நூலார் அவைகளை வேற்றுமை உருபு களினின்று வேறுபடுத்திக் காட்ட இயலாத அளவுக்கு அவை வேற்றுமைப் பொருள் (case signification) உடையனவாக வழங்குகின்றன. ஒருகால், இலக்கண நூலார் பொருளற்ற ஒலியன் தொடர்களையும் (sequence of phonemes) தெளிவாக எந்த வேற்றுமைப் பொருளைக் குறிக்கின்றது என்று வரையறுத்துக் கூற இயலாத உருபன்களையும் (morphemes) சாரியை என்னும் சொல்லால் குறித்தனரோ எனக்கருத இடமுண்டு.

எவ்வாறாயினும் வேற்றுமை உருபுகளும் சாரியைகளும் தொடர்புடையன என்பதை எவரும் மறுத்தல் இயலாது. அறிஞர் கால்டுவெல் அவர்கள் சாரியைகளைப் பழங்கால வேற்றுமை உருபுகள் எனக் கருதுகின்றார்[2].

ஆன் வடிவம்

ஆன் வடிவில் மூன்றாம் வேற்றுமை உருபை (தொ. சொ. 97) ஒத்துள்ளது. அது வழங்கும் இடங்களில் எத்தகைத்தாய் அமைகின்றது என்பதை விளக்குதலே இக்கட்டுரையின் நோக்கம் ஆகும்.

ஆன் சாரியை வழங்கும் இடங்கள்

தொல்காப்பியனார் எண்ணுப் பெயர்கள் சாரியை ஏற்பதைக் கூறுங்கால்,

> ஒன்று முதலாகப் பத்தூர்ந்து வருஉம்
> எல்லா எண்ணுஞ் சொல்லுங் காலை
> ஆன் இடை வரினும் மான மில்லை
> ....
> ....(தொ. எ. 199)

என ஒன்று முதலிய எண்களோடு பத்து இணைந்து வருங்காலும்,

இகர, ஐகார, மகர ஈற்றுப்புணர்ச்சிகூறும் பொழுது முறையே

நாள்முன் தோன்றும் தொழில்நிலைக் கிளவிக்கு
ஆன் இடை வருதல் ஐய மின்றே (தொ. எ. 247)

திங்களும் நாளும் முந்து கிளந்தன்ன (தொ. எ. 286)

நாட்பெயர்க்கிளவி மேற்கிளந் தன்ன (தொ. எ. 331)

என நாட்பெயர் முன்னர் வினை வருங்காலும் "ஆன்" சாரியை இடையே தோன்றும் என்கிறார். எனவே அவர் கூற்றுப்படி இதனை இருவகையாகப் பகுத்துப் பார்ப்போம்.

1. எண்ணுப்பெயர் முன் வழங்கும் "ஆன்" 2. நாட்பெயர் முன் வழங்கும் "ஆன்"

1. எண்ணுப்பெயர் முன் "ஆன்"

ஒருபஃது, இருபஃது என்னும் சொல்லினைகளில்
....
....
ஆன் இடை வரினும் மானம் இல்லை
அஃதென் கிளவி ஆவயின் கெடுமே
உய்தல் வேண்டும் பஃகான் மெய்யே
(தொ. எ. 199)

எனக்குறிப்பிடுகின்றார் தொல்காப்பியனார். எனவே அவர் கருத்துப்படி

ஒரு பஃது + ஐ
> ஒருப்— + ஐ (ஆன்)
> ஒரு பான் + ஐ என்றாகின்றது.

ஆனால் ஒருபானை என்னும் இச்சொற்றொடரில் ஒன்று + பத்து + ஐ ஆகிய தனிச் சொற்கள் உள்ளன என்பதைத் தொல்காப்பியனாரே ஒப்புக்கொள்ளுகின்றார். அவரே "ஒன்று முதலாகப் பத்தூர்ந்து வரூஉம் எல்லா எண்ணும்" என்று குறிப்பிட்டுள்ளார். ஆனால் ஒருபஃது, இருபஃது முதலியன[3]. வேற்றுமை உருபை ஏற்குங்கால் ஒருபானை, இருபானை என ஆகும்போது "ஆன்" சாரியை இடையே தோன்றும் என்பதைப் பொருத்தமுறச் செய்ய, பஃதின் அஃது கெட்டு, ஆன் இணைந்து நிற்கும் என்கிறார்.

தொல்காப்பியனாரே பான் என்னும் உருபை (morph) பத்தின் வேற்றுருபு (allomorph) ஆக வழங்கி உள்ளார் என்பது தெளிவு. எடுத்துக்காட்டாக ஒன்பாற்கு (தொ. எ. 475), ஒன்பான் (463) என்பவற்றில் பான் வந்துள்ளது. ஒன்பஃது, ஒன்பது, ஒன்பான், என்பன ஒரே பொருளன. பஃது, பத்து, *பான் என்பன ஒரே பொருளன. எனவே ஒன்பாற்கு என வழங்கியது போன்று ஒரு பாற்கு, ஒருபானை. இருபானை எனப் பத்தின் வேற்றுருவம்

---

* 'பத்து' என்னும் எண்ணுப் பெயர் "பான்" வடிவில் இதுகாறும் தமிழ் இலக்கியங்களில் காணப்பெறவில்லை. (ஆ—ர்)

ஆகிய பான் ஏற்று வழங்கி இருக்கும் எனக் கொள்ளுதலே சாலப் பொருந்தும். இதற்கு மாறாகத் தொல்காப்பியனார் " ஆன் " சாரியை இடையே வந்துள்ளது என விளக்கம் தருவது முற்றிலும் பொருத்தம் அற்றதேயாம்.

தொல்காப்பியனார் தவறான பிரிப்பினால் இவ்வாறு கொண்டனரோ என்று கருதவும் இடமுண்டு. பிறழ் பிரிப்பினால் (metanalysis) மொழி வழக்கில் சொற்களின் வடிவம் திரிக்கப்பட்டு தொடர்பற்ற தோற்றங்கள் ஏற்படுதல் இயல்பே. வற்று (வ் + அற்(று), அக்கு (அ(க்) + கு), மியா (ம் + (இ) யா), மின், (ம் + இன்), உந்து (உம் + து), மார் (ம் + ஆர்), மோ (ம் + ஒ), கின்று (க் + இன்று), எள் (எண்) என்பனவும் மொழியில் பிறழ் பிரிப்பால் தோன்றிய வடிவங்களேயாகும்.

எனவே எண்ணுப்பெயருடன் தொல்காப்பியர் காட்டும் ஆன் சாரியை அன்று பான் என்ற பதத்தின் வேற்றுருபின் பிற்பகுதியாகும் என்பது தெளிவு.

2. நாட் பெயர் முன் " ஆன் "

இகர, ஐகார, மகர வீற்று நாட் பெயர் முன் " ஆன் " சாரியை வரும் எனத் தொல்காப்பியனார் குறிப்பிட்டுள்ளார். அவை வினை ஏற்று முடிவுறும் என்பதையும் தெளிவுபடுத்துகிறார். இவற்றிற்கு எடுத்துக்காட்டாக உரையாசிரியர்கள்.

பரணி + ஆன் + கொண்டான் > பணியாற்கொண்டான்
கேட்டை + ஆன் + கொண்டான் > கேட்டையாற் கொண்டான்

மகம் + ஆன் + கொண்டான் > மகத்தாற்கொண்டான் என்பனவற்றைக் கொடுக்கின்றனர்[4].

" ஆன் " சாரியை வழங்கிய மேற்காட்டப்பட்ட தொடர்களில் தற்காலத் தமிழில்

பரணியில் கொண்டான்
கேட்டையில் கொண்டான்
மகத்தில் கொண்டான்

என இல் (ஏழாம் வேற்றுமை உருபு) வழங்குவது[5]. கவனித்தற் குரித்து. பண்டைத்தமிழில் இத்தொடர்களில் வழங்கிய " ஆன் " ஏழாம் வேற்றுமை காலப்பொருளில் வழங்கியது எனக் கொள்ளுதலே சாலப் பொருத்தம் உடைத்து. ஏழாம் வேற்றுமை காலப்பொருளை யும் குறித்து வழங்கும் (தொல். சொல். 81) என்பதையும் தொல்காப்பியனாரே ஒப்புக்கொள்ளுகின்றார்.

" ஆன் " வடிவில், மூன்றும் வேற்றுமை உருபேயாகும். (தொல். சொல். 97,108). ஒரு வேற்றுமையின் உருபு இன்னொரு வேற்றுமைப் பொருளில் வழங்குதல் தமிழ் இலக்கண மரபுக்கு உடன்பட்டதேயாகும். தொல்காப்பியனார்

> யாத னுருபிற் கூறிற் றாயினும்
> பொருள்சென் மருங்கில் வேற்றுமை சாரும்.
> (தொல். சொல். 106)

என்று கூறுவது இதனைத் தெளிவுபடுத்தி நிற்கின்றது.

தொல்காப்பியனார் இவ்வாறு உருபுகள் மாறி வழங்குவதை விளக்க, " வேற்றுமை மயங்கியல் " எனத் தனி ஒரு இயலையே அமைத்துள்ளதும் இவண் காணத்தக்கது. எனினும் ஏழாம் வேற்றுமைப் பொருளில் வழங்கிய " ஆன் " உருபை ஏன் சாரியை எனக் கொண்டார் என்பதற்கு அமைதி கூறுதல் இயலாது.

எனவே " ஆன் " மூன்றும் வேற்றுமை உருபே என்பதும், அது ஏழாம் வேற்றுமைக் காலப் பொருளில் வழங்கியது என்பதும் தெளிவு. ' ஆன் ' ஒரு சாரியை அன்று. தொல்காப்பியனார் சாரியையாகக் கருதும் " ஆன் " வேற்றுமை உருபே (case sign) என்பதை பேராசிரியர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் அவர்களும் விளக்கி உள்ளார்[6]. என்பது இவண் அறியும் பான்மையது.

அடிக்குறிப்புகள்.

1. தொல். எழுத்து. 119; நன்னூல் 244.
2. A comparative Grammar of Dravidian Languages — Dr. Caldwell 259 — 260 (1961)
3. இவண் பத்து என்ற சொல் தொல்காப்பியனார் காலத்தில் பஃது எனவும் வழங்கியது என்பது அறியத்தக்கது.
4. மகர ஈற்று நாட்பெயர் அத்துச்சாரியை ஏற்றபின்னர் " ஆன் " சாரியை ஏற்று வரும் என்கிறார்.

   ... ...

   அத்தும் ஆன்மிசை வரைநிலை யின்றே
   ஒற்றுமெய் கெடுதல் என்மனார் புலவர் (தொ. எ. 331)
   மகம் + அத்து + ஆன் > மகத்தான்.

இங்கு தோன்றும் சாரியை அத்து அன்று என்றும், — த்— ஆகும் என்பதும் பிறிதோர் கட்டுரையின்கண் விளக்கப்பட்டுள்ளது.

" அத்துச்சாரியை " (தமிழ்ப்பொழில் துணர் 39. மலர் 7).
— மோ. இசரயேல்

5. தொல்காப்பியனார் " இல் " என்பதை ஏழாம் வேற்றுமை உருபாகக் குறிப்பிட்டார்.
6. The so-called Inflexional Increments in Tamil — Prof. T. P. M.
   Indian Luiguistics — Turner Jubilee Vol. II. (1959)

" மொழி வளர்ச்சி " ?

திரு. M. இரத்தினம்
க பு. க. நான்காம் ஆண்டு மாணவர்.

ஒருவரைப் பற்றி ஒருவர் அறியவும் பேசவும் ஒருவரோடொருவர் தொடர்பு கொள்ளவும் உறவு கொள்ளவும் செய்யும் கருவியாக மொழி அமைகிறது. அம்மொழியே அவர்களை விட்டுப் பிரிக்க முடியாத அவர்களுடைய வாழ்க்கையோடு ஒன்றிப் போகக்கூடியதாக இருக்கிறது. ஒரு இனத்தைச் சேர்ந்த பலவகைக் குணம், மனத் தன்மைகளையுடைய மக்களைத் திட்டவட்டமான ஒரு கட்டுக்கோப்புக்கு மொழி உறவின் பிணைப்பு ஒருவரோடொருவரை நாளும் தொடர்பு படுத்திக்கொண்டேயிருக்கிறது. இனத்தின் தோற்றம் முதல் இவ்வாறு வளர்ந்த தாய்மொழியை அவ்வினம் தனக்கு வேறுபட்டது என்று கருதுவதுமில்லை; புறக்கணிப்பதுமில்லை.

தாய்மொழி தோற்றம் முதல் உள்ள உணர்ச்சி இயல்பிலேயே வளர்ந்து வாழ்க்கையின் ஒவ்வொரு துறையிலும் தொழில்களிலும் வழங்கிப் புதியவற்றைப்பற்றிய பல உணர்ச்சிகளைத் தோற்றுவித்துக் கொண்டே போகும் தன்மை வாய்ந்தது.

கோடானு கோடி புறநிகழ்ச்சிகளால்—மனித உள்ளத்தில் ஏற்படும் கிளர்ச்சிகளால் உணர்ச்சிகளைத் தோற்றுவித்து சூழ்நிலையின் எல்லாவகையான தன்மைகளையும் மாற்றங்களையும் தோற்றங்களையும் பொருட்களையும் முற்றிலும் புரிந்துகொள்ள முடியாத புதிர்களைப்பற்றியும் வாழ்க்கையைப் பற்றியும் சிந்திக்க வைத்து சூழ்நிலையோடு இடைவிடாது மொழி மனிதனைத் தொடர்பு படுத்துகிறது

மனித வாழ்வின் இயக்கப் போக்குகளின் முறைகளால் பல தொழில் துறைகளின் வளர்ச்சி விரிவுபடுத்தப்படுகிறது. மொழி வாழ்வின் இயக்கப் போக்குகளின் முறைகள்தான் இலக்கியம், கலை, கல்வி மற்ற அறிவுத்துறைகளை விரிவு படுத்துகின்றது. மனிதர்களின் உணர்வு, சிந்தனை, கற்பனைத் திறமைகளையெல்லாம் வரையறையில்லாமல் பெருக்குகின்றது.

மனிதனின் கற்பனையும் சிந்தனையும் ஒரு குறிப்பிட்ட துறையில் ஏற்படாமல் பல்வேறு துறைகளில் ஏற்பட்டு ஆராய்ச்சிகளையும் வாதங்களையும் கருத்துக்களையும் தோற்றுவிக்கின்றன. இதனால் பல புதிய உணர்ச்சிகளும் சொற்களும் சொற்றொடர்களும் வெளிப்பட்டு மொழி வளமடைகிறது. ஆராய்ச்சிகளும் வாதங்களும் பரிசோதனைகளும் நடப்பிலிருக்கும் சூழ்நிலையின் நிலைமைகளையும் பொருள்களையும் நிகழ்ச்சிகளையும் பற்றில்லாது புலப்படாத உண்மைகளையும் வழிகளையும் தோற்றுவிக்கின்றன. இந்தத் தோற்றங்களைப் பற்றிய செயல்கள் நூல்களாக எழுதி வைக்கப்படுகின்றன. அவைகட்கு கலைகள், இலக்கியங்கள். விஞ்ஞான உண்மைகள் என்ற பெயர் கொடுக்கப்பட்டு வாழ்க்கைக்குப் பயன்படுத்திக்கொள்ளவும் முடிகிறது.

உள்ள உணர்ச்சிகளின் வளர்ச்சி வடிவமாக இருந்த மொழியில் இலக்கியம், விஞ்ஞானம், ஆராய்ச்சிபோன்ற கலைத்துறைகள் ஏற்பட்டு மொழி வளர்ச்சி விரிவடைகிறது. பின் சமுதாயத்தின் அறிவும் நாகரிகமும் மேன்மையடைகின்றன. மொழி மனித உள்ளமும்

மூளையும் விரிவான முறையில் தெளிவடையவும் வாழ்க்கை வேகமாக மாற்றமடையவும் செய்கிறது. வாழ்க்கையில் மாற்றங்கள் ஏற்படும் போது நிகழும் இன்ப துன்பங்களையும் மன அமைதியற்ற நிலையையும் போக்கி அறிவு ஏற்படக் கலையும், இலக்கியமும், வாழ்க்கையை எளிமையாக்க விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளும், அரசியல், சமயம், சட்டம் முதலிய துறைகளில் தத்துவ ஞானமும் தோன்றுகின்றன. இவைகளைப்பற்றி மனித உள்ளத்தில் எழும் உணர்ச்சிகளும் எதிர்ப்புகளும் தீவிரமடைந்து ஒன்ருேடொன்று மோதுவதும் மனிதர்கள் மோதலை உணர்ந்து போராடி எந்த முறையில் தீர்க்கிருர்களோ அதைப்பற்றிய வழிகளும் செயல்களும் மொழியில் எண்ணற்ற சொற்களை சொற்ருெடர்களை கருத்துக்களை தோற்றுவித்து மொழியை மலர்விக்கின்றன.

ஒரு மொழிக்கு ஏற்படும் வளர்ச்சி அந்த இனத்தின் உணர்ச்சிகள், சிந்தனைகள், கற்பனைகள், ஆராய்ச்சிகள், உரிமைகள், செயல்கள் இவற்றை அடிப்படையாகக் கொண்டது. இந்தச் செயல்களில் பின்னடைந்து கிடக்கும் இனம் விஞ்ஞானம், ஆராய்ச்சி, கலை, இலக்கியம், அரசியல், சட்டம், பொருளாதாரம் இவைகளைப் பற்றி சொந்த உணர்வைக்கொண்டும் கருத்துக்களைக்கொண்டும் உண்மைகளைக்கொண்டும் தீர்ப்புச்சொல்ல முடியாது. அவைகள் உள்ள பிறமொழிகளைக் கற்றுத்தேர்ந்து அத்துறைகளைப் புரிந்து கொள்ளவேண்டும்.

தாய்மொழிவாயிலாக ஏற்படும் சிந்தனை, ஆராய்ச்சி, கண்டுபிடிப்புகளைப் புறக்கணித்தால்—செய்யாமல் விட்டால்—அவைகளைப் பற்றிய அறிவை வேற்று மொழிகளிலிருந்து பெறவேண்டிய நிலை ஏற்படுகிறது. இச்செயலின்மை தாய்மொழி வளர்ச்சிக்குச் செய்யும் மாபெரும் தடையாகும்.

எல்லாவற்றையும் சரியான முறையில் விளக்குவதற்கும் ஆராய்வதற்கும் ஓரினத்தின் வாழ்க்கைக் கோட்பாடுகளும் தன்னுரிமை அடிப்படையான செயல்களும் இயற்கை உறவுகளின் தொடர்பிலிருந்து ஏற்படுகிற அறிவும் ஆராய்ச்சியும் எல்லா வகையான சொற்களையும் சொற்ருெடர்களையும் கருத்துக்களையும் தோற்றுவிக்கின்றன. நாம் எல்லாத் துறைகளிலும் விரிந்தமுறையில் சிந்திக்கவும் ஆராயவும் ஈடுபடும்போது அத்துறைகளுக்குரிய சொற்களும் சொற்ருெடர்களும் கருத்துக்களும் முடிவுகளும் பயன்களும் மொழியில் நிறைந்து காணப்படல் வேண்டும். இதுதான் மொழிவாழ்வின் முழுமையான வளர்ச்சியாகும்.

ஓரினத்தின் கடந்த காலத் தலைமுறைகளின் உணர்ச்சிகள், சிந்தனைகள், ஆராய்ச்சிகள் ஒவ்வொரு துறையிலும் அவர்கள் கொண்டிருந்த தத்துவ ஞானம் படைப்பு இவைகளை ஆழ்ந்த முறையிலும் முழுமையான வகையிலும் விளக்கமாகவும் உறுதிசெய்து நிகழ்காலத் தலைமுறைக்கும் எதிர்காலத் தலைமுறைகளின் வாழ்விற்கும் வழிகாட்டும் போதனைகளாகக் கொண்டிலங்குவதாகவும் மொழி அமைகிறது. நிகழ்கால சமுதாயத்திற்கு வாழ்க்கை முறைகளை

அமைத்துச் சிந்தனையைத் தூண்டும் கருத்துக்கள் அந்த சமுதாய மெங்கும் பரவி அவைகளுக்கு அவர்கள் வழங்கும் தீர்ப்புகளை ஏற்றுர் வளர்ந்து பல தலைமுறைகளுக்கு அது கற்பிக்கிறது. மனிதர் களின் உணர்ச்சிகளும் சிந்தனைகளும் செயல்களாக மாறும்போது அச்செயல்கள் வரலாற்று நிகழ்ச்சிகளாகவும் விஞ்ஞானப் படைப்பு களாகவும் இலக்கிய படைப்புகளாகவும் விளங்குகின்றன. இவைகளை மொழி உள்ளடக்கி நிற்கிறது. மொழியைப் பொதுவாக நோக்கும் போது பல துறைகளைப் பற்றிய நிகழ்ச்சிகளையும் கருத்துக்களையும் ஆராய்ச்சிகளையும் நோக்குவதாகப் பொருள் கொள்ளல் வேண்டும்.

சிந்திப்பதன் வாயிலாகப் பலதரப்பட்ட கருத்துக்களைத் தோற்றுவித்து அறிவுத் துறைகள் பல வகையாக்கப்பட்டு செயல் படும் போதெல்லாம் அவற்றின் மூலமாக ஏற்படும் நிகழ்ச்சிகள், பொருட்கள், அப்பொருட்களின் பெயர்கள் இவைகள் யாவும் சொல் சொற்றொடர்களாக மொழி என்ற ஒரே துறையில் உள்ளடங்கி விடுகின்றன.

வாழ்க்கை முறைகள், சமுதாய அமைப்பு, அரசியலமைப்பு ஆகிய வைகளின் வளர்ச்சியின் உயர்ந்த விளைவுகளான கருத்துக்களைப் பண்பாடுகளை உள்ளடக்கியுள்ள மொழியினுல் அந்த இனத்தின் நாகரிகத்தின் மேன்மை விளங்கும். அவ் இனத்தில் தோன்றும் அறிஞர்களின் தனித்தனி செயல்களின் தன்மைகளாக சிந்தனைக ளாக அனுபவங்களாக பல நூல்கள் எழுதப்பட்டு மொழிச் சந்தை யின் வாயிலாக மக்களுக்கு வழங்கப்படுகின்றன அல்லது விற்கப்படு கின்றன. இந்த மொழிச் சந்தை இனம் முழுதும் பேசும் தாய் மொழிச் சந்தையாக இருக்கவேண்டும். மொழிச் சந்தையால்தான் பலவேறுபட்ட திறனுள்ளவர்களின் தன்மைகளை இனமுழுதும் தெரிந்து கொள்வதற்கு முடிகிறது.

மொழி வளர்ச்சியானது வெறும் ஒலிக்குறிப்புகளுடைய சொற்க ளாகி மனிதர்களின் உள்ளத்தை வறட்சியடையச் செய்வதில்லை. அது உயிர் வளர்ச்சியின் துடிப்புகளையும் பொருட்சுவையையும் உள்ள மாறுதல்களையும் கொண்டு காலத்தால் வளர்ந்து கொண்டே போகக்கூடியது. மனித உள்ளத்தில் ஏற்படும் ஒவ்வொரு உணர்ச்சிக் கும் இறுதியான பொருட் குறிப்பு உருவமும் கொடுக்கிறது. மொழி மனித வாழ்க்கை நிலைமைகளில் ஏற்படும் நிகழ்ச்சிகளை கவிதைகளாக வும் காப்பியங்களாகவும் கலைகளாகவும் படைத்து உள்ளத்தை மகிழ் விக்கும் தன்மையுடையனவாகச் செய்கிறது. மேலும் மனித உள்ளங் களில் ஏற்படும் பலவித தன்மைகளைப் பிரதிப்பலித்துக் காட்டுகிறது. இந்தப் பிரதிப்பலிப்பின் பயன் என்ன? சமுதாயத்தில் ஏற்படும் ஆழ்ந்த உணர்வு, ஆழ்ந்த சிந்தனை, வளமுள்ள கல்வி முறை, பல்வேறுன செயல் முறைகள், அதைப்பற்றிய நன்மை தீமைகளின் தொகுதியாக விளங்கும் கருத்துக்களாகி சமுதாயம் முழுவதும் இயங்கச் செய்வதேயாம்.

மொழியின் வளத்தைப்பற்றி அறியும்போது மனிதன் வாழும் இடத்து இயற்கையில் காணப்படுவதென்ன? நடப்பதென்ன?

நடந்ததென்ன ? மனிதன் உள்ளத்தில் ஏற்படும் சிந்தனைகளும் ஆராய்ச்சிகளும் என்ன ? அவற்றின் கருத்துக்கள், முடிவுகள் என்ன ? அவற்றை அடிப்படையாகக் கொண்டு எழுந்த வாழ்க்கை மேம்பாடுகள் யாவை ? நாட்டில் அவ்வப்போது எழுந்த சிக்கல்களும் அவற்றின் முடிவுகளும் என்ன ? வரலாற்று நிகழ்ச்சிகளின் வெற்றி தோல்விகள் என்ன ? என்று தெளிவாகப் புலப்படுகின்றன. இவற்றின் அடிப்படையில்தான் ஒரு இனத்தின் வளர்ச்சிக் கூறுகள் மதிப்பிடப்படுகின்றன.

மனிதனுக்கு ஏற்படும் உள்ள உணர்ச்சிகளின் மூலமாகத் தோன்றிய மொழிவளத்துக்குரிய காரணங்களாக (1) உள்ளக் கிளர்ச்சி (2) செயல்கள், புற நிகழ்ச்சிகள் (3) இயற்கைத் தூண்டுதல்கள் (4) இனவாழ்வின் பயன்கள் (5) தான் வாழும் இயற்கை சூழ்நிலையின் எல்லை (6) அறிவின் எல்லை என்பவைகள் அமைகின்றன. மனித உள்ளம் இயற்கை தொடர்பிலிருந்தும் உள்ள வேட்கை தூண்டுதல்களிலிருந்தும் கிளர்ச்சியடைந்து கொண்டேயிருக்கிறது. அதன் காரணமாக உணர்ச்சிகளும் செயல்களும் ஏற்பட்டு பொருட் குறிப்புகளுடைய சொற்கள் தோன்றி கொண்டேயிருக்கின்றன.

மொழி வளத்திற்குத் தனி மனிதர்களின் கற்பனைகளும் சிந்தனைகளும் ஆராய்ச்சிகளும் மொழியில் கருத்துக்களையும் சொற்களையும் குவிக்கின்றன. சொற் குவியல்களின் தொகுதியாகிய நூல்கள் மொழி வளர்ச்சியின் ஏற்றத்திற்கு உயர்ந்த கருத்துக்களைக்கொண்டதாகவும் இருக்கவேண்டும். வாழ்க்கைக்கும் அறிவுக்குமுரிய எல்லாத் துறைகளையும் புறக்கணிக்காமல் தங்கள் உள்ளத்தை ஈடுபடுத்திச் செயல்புரிய முனைந்தால் பல புதுமைகள் தோன்றும். அதையொட்டி மொழியில் பல கலைச் செல்வங்களின் தோற்றத்தின் உருவங்கள் பதிவாகும்.

சிந்தனையை விரிவாக்கும் வகையிலே பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளின் இன வாழ்க்கையின்—நாகரிக வளர்ச்சியின்—கலைத் துறைகளின் பெருமைகளைக் கொண்ட சொற்குவியல்கள் மொழியில் நிறைகின்றன. தாய்மொழி வளர்ச்சி என்றால் வெறும் சொற்குவியல்களாகமட்டுமில்லாமல் ஒவ்வொரு சொல்லும் ஆழ்ந்த பொருளை குறிப்பனவாகவும் சொற்றொடர்களாகத் தொடர்ந்து உள்ள உணர்ச்சிகளை இணைத்து உள்ளக் குறிப்பை-கருத்தை வெளிக் காட்டுவதாகவும் இருக்கவேண்டும்.

மொழி வளர்ச்சி இன உறவை மேலோங்க செய்து வீர வெற்றியுடன் திகழ்ந்து உறுதிகுலையாத ஒரு கட்டுக்கோப்புக்கு ஒற்றுமைக்கு அர்ப்பணித்துக் கொள்ளும் பற்று ஏற்படச் செய்தல் வேண்டும். நாட்டில் ஏற்படும் முரண்பட்டபோக்குகளும் கிளர்ச்சிகளும் அரசியல் கோட்பாடுகளும் மக்களின் முற்போக்கான சிந்தனைகளையும் கருத்துக்களையும் வெளிப்படுத்திக்காட்டி அரசியல் கலையை வளர்த்து மொழிக்கும் இனத்துக்கும் பெருமை ஏற்படச் செய்தல்வேண்டும்.

தமிழர் அருள் வாழ்வு

புலவர், தி. நா. அறிவுஒளி

பண்டைத் தமிழர் வாழ்வு அருள் வாழ்வாக இலங்கியது. ஆண்மையையும், மறத்தையும் தமிழர் கடைப்பிடித்தனராயினும், உண்மையில் அருளுணர்வையே தமிழ் மன்பதை நனி போற்றி வழிபட்டது என்பதை இலக்கிய—இலக்கண—வாழ்க்கைச் சான்றுகளால் நன்கு அறியலாம்.

ஊரிலிருந்து நம் உறவினரோ, நண்பரோ நம்மகத்துக்கு விருந்தினராக வந்தால், 'எப்போது வந்தீர்கள்?' 'வீட்டில் எல்லோரும் நலமா?' என நலம் உசாவுவோம். பிறகு, "ஊரில் மழை பெய்ததா?" எனக் கேட்போம். இதுவரை தனிப்பட்ட நண்பர்—உறவினர்—குழந்தையர் நலனை வினவியறிந்த நாம், திடுமென நம் பேச்சுக்குத் தொடர்பில்லாத 'மழை பொழிந்ததா?' என்ற வினாவை ஏன் வினவவேண்டும்? அவர்கள் ஊரில் மழை பெய்வதற்கும் நமக்கும் என்ன தொடர்பு? இந்தப் பேச்சு மரபு ஏன் வந்தது? இந்த வினாவை வினவுவதன் உயிர்க்கொள்கை—அடிப்படையுண்மை—என்ன? என்றெல்லாம் நுணுகி ஆராய்ந்தால் 'மழை பெய்ததா?' எனக் கேட்பதன் அரிய பண்பாடு தெளிவாகும்.

மழை பெய்வது நீர்வளத்தைச் சமைக்க முதன்மையானதாகும். மழை பெய்தால் பயிர் வளம் சிறக்கும். அதனால் ஊர் வளம், மக்கள் வளம் செழிக்கும். இதனால் நாடே நலம்பெறும். குடும்பத்தினர் நலத்தையும், குழந்தையர் நலத்தையும் கேட்டறிந்தபின், ஊரார்—நாட்டினர்—நலத்தை அறிவதற்காகவே, "அந்த ஊரில் மழை பெய்ததா" எனக் கேட்கும் 'அருள் வினா' வழக்குப் பேச்சில் பயின்று வருகிறது.

தனிக் குடும்ப நலனைமட்டும் அறிந்தால் போதாது: ஊர் நலனும், நாட்டு நலனும், உலக நலனும் அறியவேண்டும். அதுவே மக்கட் பண்பு; அதுவே உயிர்வாழ்க்கையின் உள்ளுறை என்ற உண்மையை அடிப்படையாகக் கொண்டே 'மழை பெய்ததா?' என்ற வினாவை வாழ்க்கை நலன் உசாவும் இன்றியமையாத வழக்கில் சான்றோர் அமைத்தனர்.

தமிழரின் உலக நலன் விழையும் அருள் உள்ளப் பாங்கை விளக்க இந்தச் சிறு எடுத்துக்காட்டினும் வேறு எதுவும் வேண்டியதில்லை. இந்தப் பேச்சுமுறை வரவரக் குறைந்துவரக் காண்கிறோம். இது மிகவும் வருந்துதற்குரியதாகும். ஆனால் நம் நாட்டுச் சிற்றூர்களில், கல்லாரும்கூட இன்னும் இந்த அருள் மரபு நிலைநாட்டும் வினாவை வினவி அளவளாவுவதைக் காணலாம்; கேட்கலாம்!

'யாதும் ஊரே யாவரும் கேளிர்' எனப் பாடினார் அருள் உள்ளத்து ஞாலப் புலவர் பெருந்தகை பூங்குன்றனார். 'உலகில் வாழும்

---

* திருக்கழுக்குன்றத்தில் ஆற்றிய சொற்பொழிவுச் சுருக்கம்.

யாவரும் எம் உறவினரே!' என்ற அருளுறவுக் கொள்கையைப் பெற்றெடுத்த தாயகம் நம் தமிழகம். அத்தாயக மக்களாகிய தமிழர் வாழ்வு அருள் வாழ்வே என்பதற்கு 'மழை பெய்ததா?' என்ற வினு அரிய வழக்குச் சான்று. இதனுற்ருன் வள்ளுவச் சான்ளேரும். 'வான் சிறப்பு'க்கு முதன்மை நல்கினர். 'உலகத் துயிரெல்லாம் வாழ வேண்டும்' என்ற அருளுணர்வின் வேண்டுதல்தான் 'வான் சிறப்பை' வாழ்த்துவதற்கு வள்ளுவரைத் தூண்டியது. வள்ளுவரின் அடிச்சுவட்டில் நடந்த வள்ளலார் இராமலிங்க அடிகளாரும், "அப்பா நான் வேண்டுதல் கேட்டு அருள் புரிதல் வேண்டும்! ஆருயிர்கட் கெல்லாம் நான் அன்பு செய்தல் வேண்டும்" என்றும், "அருட் பெரும் ஒளி; தனிப் பெரும் அருள்" என்றும் பாடியருளினர். 'அருளும் ஒளியுமே பேரின்ப வாழ்வு' என்ற பேருண்மையைத் தமிழர் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே ஆய்ந்தறிந்து கடைப் பிடித்தொழுகி வரும் மரபின் தற்காலக் காவலராக வடலூர் வள்ளலார் திகழ்கிருர்.

தமிழன் பேச்சு வழக்கில் 'அருள்' பெற்ற தகுதிசான்ற தலைமையிடம் போல வேறு சொல்பெறவில்லை. மற்றவர்களை ஒரு பணிசெய்யுமாறு வேண்டும் வேண்டுகோளிலும் 'அருளுக்கே' இட முண்டு. 'எழுந்தருள்க!' 'உண்டருள்க!' 'சென்றருள்க'! 'வந்தருள்க!' என வழங்கும் பேச்சு வழக்கு அன்றும் இன்றும் தமிழில் மட்டுமே உண்டு. தமிழர் வாழ்வில் அருள் பெற்றிருக்கும் சிறப்பான—உயிரான முதன்மை இடம் எத்தகையது கண்டீர்களா?

தமிழில் எந்த வினைமுற்ருேடும் — பயனிலையோடும் — இந்த 'அருள்' என்ற கிளவி அழகாகப் பொருந்தி வழங்குவது ஒரு தனிச் சிறப்பாகும். சேக்கிழார், 'திருநாவுக்கரசர் காதையில்' இச் சொல்லாட்சியை தனியழகாகப் பாடியருளியிருக்கிருர்.

"ஆண்டஅர செழுந்தருளி அணியாரூர் மணிப்புற்றில் [அமர்ந்துவாழும்
நீண்டசுடர் மாமணியைக் கும்பிட்டு நீடுதிருப் புகலூர் நோக்கி,
மீண்டருளினு ரென்று கேட்டருளி எதிர்கொள்ளும் விருப்பி [னோடும்,
ஈண்டுபெருந் தொண்டர்குழாம் புடைசூழ எழுந்தருளி எதிரே [சென்ருர்",

(திருத்தொண்டர்: திருநாவு: 232)

வினையெச்சங்களோடும் 'அருள்' எனும் அருஞ்சொல் இணைந்து தமிழில் பொலிவது தமிழ் மரபாகவே வழங்கி வருகிறது.

"உம்பர் பிரான் திருத்தொண்டர் உள்ளத்தில் தடுமாற்றம்
நம்பர் திரு வருளாலே அறிந்தருளி நவைதீர்ப்பார்"
(திருத்: திருநாவு: 207) என்ற விடத்தில்

அவ்வாறு சேக்கிழார் ஆண்டமை அறியலாம். இவ்வாறு வினை களோடு அருளை இணைத்து இனிய தமிழ்ப்பாவியற்றிய திருத்

தொண்டினைச் சேக்கிழார் தம் 'தொண்டர் காதை'யில் அளவின்றி செய்துள்ளார்! 'அருள்' என்ற சொல்மீதுகூட தமிழ்ச் சான்றோர்களுக்கும், பொதுமக்களுக்கும் எவ்வளவு காதல்!

'குறளைத் திருவாய் மலர்ந்தருளினார் திருவள்ளுவர்' எனவன்றோ சுவைஞர்கள் கூறுகின்றனர். பாட்டு இயற்றுவதும், உரையாற்றுவதும், நூல் யாய்ப்பதும்கூட 'அருள்' உணர்வால் தான் என்றும், எல்லாப்பணிகளும் 'அருளால்' நிகழ்பவைதான் என்றும் இதனால் நன்கு தெளியலாம். உள்ளத்தில் எண்ணுவதையும் 'நினைந்தருளி' எனக்கூறுவதே தமிழர் மரபு. நினைப்பிலும் எண்ணத்திலும்கூட அருள் தவழும்படி வாழ்ந்தவர்கள் தமிழர்கள்! அதனால்தான்! எண்ணம்—சொல்—செயல் எங்கும் அருளுக்கே முதன்மை—தலைமை—தந்தருளியுள்ளனர்!

கொடியவனைத் தமிழர் பழிக்கும்போது "நெஞ்சில் ஈரம் இல்லாதவன்" என்பர். ஈரம் என்ற சொல் அருள் என்ற பொருளில் இத்தொடரில் ஆளப்படுவதை நாம் அறிவோம். தொல்காப்பியர் மெய்ப்பாட்டியல் 260-ஆம் நூற்பாவில் ஈரம் என்ற சொல்லை அருள் என்ற பொருளில் ஆள்கிறார் என்பதை யறிக.

பேச்சு வழக்கில் அருளுக்கு உள்ள செல்வாக்கை நன்கு அறிந்தோம். உலக வழக்குதான் புலனெறி வழக்கமாகவும், நூல் வழக்காகவும் அமைகிறது. அவ்வாறு தமிழிலக்கணத்தில் 'அருளுக்கு' இடம் மிகுதியாக உள்ளது.

தமிழின் மிகப் பழம்பெரும் உயர்சீர் இலக்கணமான தொல்காப்பியத்திலேயே, மேதை தொல்காப்பியரால் அருள் உணர்வும், அருள் வாழ்வும் மிகவும் போற்றப்பட்டுள்ளது.

தொல்காப்பியப் பொருளதிகாரம் தமிழர் வாழ்வுக்கு வகுத்த செவ்விலக்கணம். வாழ்க்கை இலக்கணத்தில் அருள் பெற்றுள்ள தலைமையிடம் மிக வியக்கத்தக்கது.

இவ்வுலக வாழ்வுக்குரியோர் ஆடவரும் மகளிருமாவர். ஓர் ஆணுக்கும், பெண்ணுக்கும் மிகமிக இன்றியமையாத பத்து இயல்புகள்—பண்புகள்—அமைதிகள் ஒத்த அளவில் இருக்கவேண்டும் என்று பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே தமிழ்ப் பெருமக்கள் வரையறை செய்துள்ளனர். அந்த இலக்கணத்தைத் தொல்காப்பியர் நமக்குக் கூறுகிறார்.

ஓர் ஆண்மகனுக்கு நல்ல பிறப்பு இருக்கவேண்டும். பிறப்பால் யாதொரு குறையும், களங்கமும் இன்றி உயர்ந்த சிறப்போடு இருக்கவேண்டும்; உயர்ந்த குடிமை—ஒழுக்கம்—அமைந்திருக்கவேண்டும், ஆண்மை—ஆண்மைத் தன்மை—ஆற்றல், ஆள்வினையுடைமை, வலிமையினின்றும் மாறாத இயல்பு அமையவேண்டும்; மணவாழ்வுக்கு ஏற்ற வயது (ஆண்டு) இருக்கவேண்டும். பெண்ணைவிட

வயது குறைவாகவோ, மிக மிகுதியாகவோ இருக்கக்கூடாது. பொருத்தமான பருவத்தோடிருக்கவேண்டும்; நல்ல உடற்கட்டும், உருவப் பொலிவும் அழகும் அமைந்திருக்கவேண்டும்; கணவனுக்கு மனைவியின் பால் நிலைநிறுத்தப்பட்ட காதல்மிக்கிருக்கவேண்டும். அடுத்து அடக்கமும் அருளும், (பிறர் துன்பத்திற்குப் பரிந்துருகும் அன்பு மிகுதி) உணர்வும் (அறிவும்), செல்வவளமும் என்று கூறப்பட்ட பத்து நலன்களும் பொருந்தியிருக்க வேண்டும்.

இதுபோலவே பெண்ணுக்கும் நற்பிறப்பும், நல்ல குடிமையும் (ஒழுக்கமும்) பெண்மையும், தக்க பருவ வயதும். அழகுருவமும் (நல்லுடலும்) கணவன் மாட்டு கற்புக்காதல் ஈடுபாடும், நிறை என்ற பண்பும், அருளும், அறிவும் (உணர்வு நலமும்) செல்வமும் என்ற பத்து முறையான அமைப்புக்களும் செவ்விதின் அமைந்திருக்க வேண்டும்.

" பிறப்பே குடிமை ஆண்மை ஆண்டோடு
உருவு நிறுத்த காம வாயில்
நிறையே அருளே உணர்வொடு திருவென
முறையுறக் கிளந்த ஒப்பினது வகையே "

(தொல் – மெய் : 259)

இந்நூற்பாவால் இல்வாழ்வுக்குரிய ஆணுக்கும், பெண்ணுக்கும் கட்டாயமாக இருந்தே தீரவேண்டிய பத்து இயல்புகளில் ' அருள் ' ஒன்று எனத் தொல்காப்பியரும், அக்காலத் தமிழ்ச் சான்றோரும் கருதியமை புலனாகும். பண்டைத் தமிழர் வாழ்வு அருள் வாழ்வே என்பது இதனால் உறுதியாகிறது.

குறிஞ்சி முல்லை மருதம் நெய்தல் பாலை என்ற ஐந்து வகைத் திணைகளுக்குரிய ஒழுக்கங்களைக் கொண்டொழுகிக், களவொழுக்கத்தில் ஈடுபட்டுக் காதல் வாழ்வில் தலைப்படுகின்ற தலைவன் — தலைவியர்க்குப், பத்து வகையான சிறப்பான உணர்வுப் புலப்பாடுகள் நிகழும். இப்பத்துப் பொருள்களும் பற்றி அவர்கள் உள்ளத்தே உணர்வு நிலை எழும். அவை அவர்களில் பேச்சிலும் பொருளாக வெளிப்படும் என வகுத்துரைக்கிறார் தொல்காப்பியர், தம் காலத்து இல்லறத்தினர் வாழ்க்கையை ஆராய்ந்து தெளிந்தே அவர் கூறியுள்ளார். அந்தப் பத்தும் ' அழிவில் கூட்டத்திற்குரிய பொருள்கள் ' எனக் குறிக்கப்படும்.

" தெய்வம் அஞ்சல் புரையறந் தெளிதல்
இல்லது காய்தல், உள்ளது வர்த்தல்,
புணர்ந்துழி யுண்மை, பொழுது மறுப்பாதல்,
அருண்மிக உடைமை அன்புமிக திற்றல்
பிரிவாற்றுமை, மறைந்தவை யுரைத்தல்,
புறஞ்சொல் மாணக் கிளவியொடு தொகைஇச்
சிறந்த பத்துஞ் செப்பிய பொருளே. " (தொல் – மெய் : 268)

இந்நூற்பாவில் தலைவன்–தலைவியர்க் கிருக்க வேண்டிய இன்றி யமையாத — இயல்புகளான அன்பு–அருள் மிகவுடைமையை வற் புறுத்திக் கூறியுள்ளமை கருதுவதற்குரியதாம்.

'தலைவன் மாட்டு அருள் புலப்பட நிற்கும் நிலை அருள் மிக வுடைமை' என உரையாசிரியர் விளக்கம் தருகிறார்.

மெய்ப்பாட்டியல், மக்களுணர்ச்சிகள் — சுவைகள் — பயன்கள் பற்றி விரிவாக ஆராயும் இயற்கை உளவியற் கலைப் பகுதியாகத் தொல்காப்பியர் ஆக்கியருளியுள்ளார்.

எட்டுவகை மெய்ப்பாடுகளும், அவை தோன்றுமாறும் தனித் தனி விரிவாக விளக்கிய பின்னர் தொல்காப்பியர், மேற்கூறிய எண் வகை மெய்ப்பாடுகளே யன்றி வேறு முப்பத்திரண்டு இயல்புணர் வுகள் உலகமாந்தர் உள்ளத்திலும் வாழ்விலும் இருப்பதை யறிந்து, அவற்றையும் முறையாகத் தொகுத்துள்ளார். அவற்றுள் அன்பை யும், அருளையும், அமைத்துள்ளார்;

"ஆங்கவை, ஒருபால் ஆக வொருபால்
உடைமை இன்புறல் நடுவுநிலை யருளல்
தன்மை அடக்கம் வரைதல் அன்பெனாஅக்
கைம்மிகல் நலிதல் சூழ்ச்சி வாழ்த்தல்
நாணல் துஞ்சல் அரற்றுக் கனவெனாஅ
முனிதல் நினைதல் வெரூஉதல் மடிமை
கருதல் ஆராய்ச்சி விரைவுயிர்ப் பெனாஅக்
கையாறு இடுக்கண் பொச்சாப்புப் பொருமை
வியர்த்தல ஐயம் மிகைநடுக் கெனாஅ
அவையும் உளவே அவையலங் கடையே."

(தொல் : மெய் : 256.)

இவ்விடத்து இளம்பூரணர், 'அருளாவது எல்லாவுயிர்க்கும் அளிசெய்தல்' என அழகாக விளக்கம் வரைந்துள்ளார். எவ் வுயிர்க்கும் பேரன்போடு உதவி வாழும் நிலையே அருளாம். அன் பானது பயின்றோர் மாட்டுச்செல்லும் காதலாகும். அருளோ பயி லாதார் மாட்டும் நிகழும் இரக்கஉருக்க உள்நெகிழ்ச்சியும், அதன் பயனாகவிளையும் சொல்லும்—செயலும்—பயனுமாகும்.

ஒரு தலைவி எவ்வாறு பேசவேண்டும் என்பதையும் தொல்காப் பியம் அழகாக அறிவுறுத்துகிறது. "அருள் முன்முன் தோன்றக் கூடிய அன்பு பொதிந்த இனிய மொழிகளால் பொருள் அமையப் பேசுதல் தலைவிக்கு—மனைவிக்கு—உரிய இயல்பாகும்" பண்டைத் தமிழகப் பெண்டிரின் பேச்சின் அமைதி அருளுணர்வு கனிந்து இலங்கிய வாய்மையை இதனால் அறியலாம்;

"அருண் முந்துறுத்த அன்புபொதி கிளவி
பொருள்பட மொழிதல் கிழவோட் குரித்தே." என்ற

(தொல்: கற்பு: 159)

நூற்பா இக்கால மகளிர்க்கும் மிகப் பயன்படுவதொன்றல்லவா?

அகத்திணையில் மட்டுமின்றி, புறத்திணையிலும் அருளுடைமையைச் சுட்டுகிறார் தொல்காப்பியச் சான்றோர்.

வாகைத்துறை யுணர்த்தும் 'கூதிர் வேனில்' எனத் துவங்கும் நூற்பாவில், "பொருளோடு புணர்ந்த பக்கத் தானும்
அருளொடு புணர்ந்த அகற்சி யானும்..."

(தொல் : புறத்திணை : 75)

என அருள் வாழ்வைக் காட்டுகிறார். ஈண்டு உரையாசிரியர், "அருளுடைமையாவது" யாதானும் ஓர் உயிர் இடர்ப்படுமிடத்துத் தன்னுயிர் வருந்தினாற்போல வருந்தும் ஈரமுடைமை' என தனி சிறப்பான அழகிய பொருள்பொதி விளக்கம் அருளியிருக்கிறார்.

இவ்வாறு இலக்கண நூலிலும் அருளுணர்வை, அருள் வாழ்வைப் போற்றினர் தமிழர் என்பதை உணர்ந்தால் அருட்செல்வத்தின் அருமையும் இனிமையும இன்றியமையாமையும் நன்கு புலனும்.

தொல்காப்பியர் காலத்தில் மட்டுமின்றிப் பிற்காலத்து நன்னூலாரும் தம் இலக்கணத்தில் உயிர்ப்பொருட்களின் பண்பியல்பினைத் தொகுத்துக் கூறும்போது அறிவுக்கு அடுத்ததாக—இரண்டாம் தகுதியை—அருளுடைமைக்கே வழங்கியுள்ளார்.

"அறிவு அருள் ஆசை அச்சம் மானம்
நிறை பொறை ஓர்ப்புக் கடைப்பிடி மையல்
நினைவு வெறுப்பு உவப்பு இரக்கம் நாண் வெகுளி
துணிவு அழுக்காறு அன்பு எளிமை எய்த்தல்
துன்பம் இன்பம் இளமை மூப்பு இகல்
வென்றி பொச்சாப்பு ஊக்கம் மறம் மதம்
மறவி இனைய உடல் கொள் உயிர்க்குணம்

(நன்னூல் : உயிரியல் : 452)

இவ்வாறு அருளும் அருள் வாழ்வும் இலக்கணப் புலவர்களாலும் தனிபோற்றும் தகுதி வாழ்வில் அதுபெற்ற சிறப்பால் அமைந்ததே.

இனி, உலகப் பாவாணராம் உயர் திருவள்ளுவப் பெருந்தகையாரோவெனின் 'அருளுடைமை' என ஓர் தனி யதிகாரமே வகுத்து அருளின் இலக்கணத்தையும் விழுப்பத்தையும் வாழ்வுப் பயனையும் உலகினர்க்குத் தெற்றெனக் காட்டியுள்ளார். குறள்நூல் தமிழர் வாழ்வைக்கண்ட வள்ளுவ அந்தணர், அவ்வரிய பண்பறத்தை உணர்ந்து உலகம் உய்யப் பாடியருளியுள்ளார்.

உலகில் எத்துணையோ வகை வகையான செல்வங்கள் இருக்கலாம். ஆயின் அவையெல்லாம் மெய்ச்செல்வங்களன்று. அருட்செல்வமே செல்வங்களுக்குள்ளேயே தலைமையான செல்வம். ஏனெனில் அருட்செல்வம் உயர்ந்தவர்களாகிய சான்றோர்களிடம் வாழும் சிறப்புடையது. பொருட்செல்வமோ நல்லோரிடம் ஓரளவு இருந்தாலும் இழிந்தோரிடமும் இருப்பது. அருட்செல்வம் எல்லா உயிர்

களையும் ஓம்பி அறம் வளர்க்கும் இயல்புடையது. ஆயின் பொருட் செல்வம் நலத்தைப் பயக்கின்றதெனினும், தீமை வளரவும் உதவி செய்துவிடுகிறது. எனவே பொருளால் குறைபாடுகளும் குற்றங் களும் வளர்வதுபோல, அருளால் யாதொரு சிறுகுறையும் உண் டாகாமையால் அருட்செல்வமே தலை சிறந்தது.

நல்ல நெறியால் அறத்தையே விளைவிக்கும் முறையை ஆராய்ந்து அருளைக் கையாண்டொழுக வேண்டும். எந்த வழி களில் ஆய்ந்து பார்ப்பினும் அருளே மக்களுக்கு நீங்காத் துணையாக அமைந்துள்ளது.

இருள் சூழ்ந்த துன்ப உலகில் உழலும் துன்பம், அருள் செறிந்த நல்ல நெஞ்சினர்க்குக் கிடையாது.

எல்லா உயிர்களையும் பேணிக் காப்பாற்றி அருளையே வாழ்வில் ஆட்சிசெய்து வாழ்கின்றவர்களுக்குத் தன்னுயிர்க்கு எப்பகைவரா லேனும் தீங்குவருமோ என அஞ்சும் அச்சம் எக்காலத்திலும் கிடையாது. தன்னுயிர்க்கு ஊறுபயக்கும் தீவினைக்காக அருளா ளர்கள் அஞ்சவேண்டியதில்லை.

அருளாளர்களுக்கு எப்போதும் துன்பமே இல்லை. காற்று வழங்கக்கூடிய வளமிக்க இப்பெரிய உலகமே அதற்குச் சான்றாகும்.

உறுதிப்பொருளை, அறத்தை நீங்கி அதை மறந்தவரே, அருளை நீங்கி, (நல்லோர் தீயவை என ஒதுக்கிய) அல்லவை செய்து வாழ்ப வர்களாவர்.

உயிர்கள்பால் அருள் இல்லாதவர்க்கு இன்ப உலகம் இல்லை பொருளில்லாதவர்க்கு இவ்வுலக வாழ்வின்பம் இல்லை.

ஏழைகள் ஒரு காலத்தில் முயற்சிசெய்து உழைத்துச் செல்வர் களாகத் திகழ்தலும் கூடும். இதுபோலின்றி, அருள் இல்லாதவர் ஒருகாலத்திலும் உயர்தலில்லை ; அவர்கள் வாழ்வே அழியும். அவ் வாழ்வு எப்போதும் நன்னிலை எய்தாது.

உயிர்களிடம் உண்மையான உருக்கத்தோடு உணர்ந்து அருள் செய்யாத ஒருவன் செய்யும் அறத்தை நன்கு ஆராய்ந்தால், அறி வில்லாதவன் (தெளிவில்லாதவன்) மெய்ப்பொருளை உணர்ந்தது போன்றது! உண்மையில் இருவரும் உண்மையாக அருளையோ, மெய்பொருளையோ உணர்வதில்லை. ஆகவே உயிர்கள்பால் உண்மைக்காதல் உள்ளத்தில் ஊற்றெனப் பொங்கப் பிறகே அருள் தொண்டில் தலைப்பட்டு நிலை நிற்றல் வேண்டும். அவ்வாறு உணர்வு மலர்ச்சியின்றேல் அவ்வருட்செயல் நிறைவேறாது, குறைபட்டுப் போதலும் கூடும்.

நம்மைவிட வலிமைவாய்ந்தோர் நமக்குத் துன்பம் செய்யும் போது தம் நிலை எவ்வாறு அஞ்சத்தக்கதாக, இரங்கத்தக்கதாக

இருக்குமோ; அதைப் போன்றே, நாம் நம்மைவிட எளியோருக்குத் துன்பம் உண்டாக்கும்போது, அவர்கள் நிலேயும் அஞ்சி வருந்தத் தக்கதாக இருக்கும்.

ஆகவே, நாம் நம்மைவிட எளியோரிடம் இரக்கம்காட்டி அருளுணர்வோடு நடந்துகொள்ள வேண்டும்.

நமக்குத் துன்பம் என்ன வருத்தத்தைத் தருமோ, அதேபோலத் தான் மற்றவர்கட்கும் துன்பம் நோய் செய்யும் என்பதைப் புரிந்து உணர்ந்துகொண்டால், நாம் மற்றவர்களிடம் அருள்காட்டி வாழ வேண்டியதன் இன்றியமையாமையை நன்கு அறியலாம்.'

இவ்வாறு திருவள்ளுவப் பெருந்தகை 'அருளுடைமை' பற்றி அறிவுறுத்தியுள்ளார். தமிழர் வாழ்வொழுக்கம் நிலமீது நீடூழி நிலேக்கவே குறளறத்தை அருளினர் வள்ளுவர். ஆகவே பண்டைத் தமிழர் அறமான அருளொழுக்கத்தையே இவண் உலகக் கலேஞராம் வள்ளுவர் வற்புறுத்தியருளினர்.

அன்பு என்ற தாய் ஈன்றெடுத்த குழவியே அருளாகும் வள்ளுவர் 'அருள் என்னும் அன்பு ஈன்குழவி' எனத் தெளிவாக இவ்வுண்மையைச் சுட்டுகிருர்.

புறப்பொருளுக்கு இலக்கணமும் இலக்கியமுமாக வெண்பா மாலேயை ஐயனரிதனர் இயற்றியருளினர். அந்தப் புறத்துறை நூலிலும் அருளேச் சிறப்பித்து நனிமீயுயர்வோடு மதித்துப் போற்றுகிருர் வரலாற்று மேதை ஐயனரிதனர்.

"நூல் நெறியால் நன்கு ஆராய்ந்து தெளியும்போது, அருளுடைமையே உண்மையான அறமாகும்.

ஏழைகளுக்குச், செல்வத்தைத் தனக்கே வேண்டுமெனப் பேணிப் புதைத்து வைக்காமல் வழங்கும் பொருளே உண்மையான உறுதி நல்கும் பொருளாகும்.

கொண்டானே யன்றி வேருெருவர்பால் தன் நெஞ்ச விருப்பத்தைப் போக்காது அகத்தையும் புறத்தையும் காத்துக் கணவன் உள்ளம் உவக்கும் வண்ணம் வாழும் பெண்டிரின் மென்மையான தோளே நீங்காமல் தண்ணளிசெய்து வாழ்வதே அன்பு அல்லது இன்பம் ஆகும்.

என முதுமொழிக் காஞ்சித் துறையின் இலக்கணத்தை விரித்துரைக்குமிடத்து 'அருளேயே அறம்' எனப் போற்றிய பாடல் உலகில் தலேசிறந்த இலக்கியப் பாடல்களுள் ஒன்ருகும்:

" ஆற்றின் உணரின் அருள் அறமாம்; ஆற்ருர்க்குப்
போற்ருர் வழங்கிற் பொருள் பொருளாம்—மாற்றிப்
புகலா தொழுகும் புரிவளேயார் மென்தோள்
அகலா தளித்தொழுகல் அன்பு."

(பு. வெ. மாலே: 269)

அறம் — பொருள் — இன்பம் என்ற மூவகை இயற்கை அமைப்புகட்கும் சுருங்கிய, பொருந்திய இனிய விளக்கத்தை ஐயனாரிதனார் அருளிய மாண்பும் மதிநுட்பமும் போற்றத் தக்கன.

இதே கருத்தை, "அருளால் அறம் வளரும்; ஆள் வினையால் ஆக்கம்; பொருளால் பொருள் வளரும்"... (அறநெறிச்சாரம் : 196) எனப் பிற்காலத் தமிழறிஞரும் போற்றி ஏற்பது எண்ணுதற்குரியது.

"இருளே உலகத் தியற்கை இருளகற்றும்
கைவிளக்கே கற்ற அறிவுடைமை—கைவிளக்கின்
நெய்யே தன்னெஞ்சத் தருளுடைமை..." என அதே அறநெறிச்சாரம் 194-ஆம் பாடல் கூறும். அறிவுடைமையின் உயிர் நிலையை ஒப்பற்ற உவமை வாயிலாக விளக்குகிறார். அறிவுடையார் எல்லாரும் அருளுடையோராக விளங்க வேண்டும் என்பது தமிழ்ச் சான்றோர் தீர்ப்பு. இன்று அப்பழம் பெரும் பண்பை எத்துணை கல்வியறிவுடையோர் கடைப்பிடித் தொழுகுகின்றனர் ?

'மக்கள் நெஞ்சம் தீமை பயக்கும்' மனமயக்கமாகிய இருளோடு இணைந்திருக்கக் கூடாது. மனத்தீமையே வாழ்க்கையில் இருள் சேர்ப்பது. இவ்வுலக வாழ்வுக்கு அக இருள் அறவே கூடாது. பெருமைசான்ற பேரியோர்கள் ஆராய்ந்துணர்ந்து உலகத்துக்கு அருள்புரிந்த பரந்த நோக்கங்களையுடைய சீரிய நெறிகளின்மீது உள்ளம் நிலைபெறவேண்டும். அவ்வாறு உள்ளம் நிலைபெற்றால் அடக்கம் என்ற அரும்பெறல் ஆற்றல்சால் பண்பு அமையும். இந்தப் பெரிய உலகில் நல்லதான திருவருளோடு வாழ்ந்தால் எல்லாத் துன்பங்களினின்றும் அகன்று, பேரின்பப் பேறுடைய புகழ் வாழ்வில் சான்றோராய்த்திகழலாம் நம் மக்கள் நெஞ்சம் இந்த நல்லற நெறியுணர்ந்து ஒழுக வேண்டும். என்று 'பொருள் மொழிக் காஞ்சி' என்ற பொதுவியற்படலத்துறை மேற்கோள் வெண்பாவில் ஐயனாரிதனார் 'அருள் வாழ்வு' பற்றி அருமையாக அறிவுறுத்துகிறார்.

"ஆய பெருமை அவிர் சடையோர் ஆய்ந்துணர்ந்த
பாய நெறிமேற் படர்ந் தொடுங்கித் — தீய
இருளொடு வைகா திடம்படு ஞாலத்து
அருளொடு வைகி அகல்." (பு. வெ. மா. 271)

ஐயனாரிதனார் போர், மறம் பற்றிப் பாடமுற்பட்ட பொருளிலக்கண நூலிலும் இறுதி அறிவுரையாக – உறுதிக் கருத்தாக – அருள் வாழ்வையே போற்றி யுரைத்தார். மறத்திலும் – ஆண்மையிலும் – ஆற்றல் மிக்கது அருளே என அவர் உணர்ந்து, அவ்வுண்மையை ஒளிக்காமல் உணர்த்தியமை வியக்கத்தக்கது.

வள்ளுவர், "பேராண்மை என்பதறுகண் ஒன்று உற்றக்கால்
ஊராண்மை மற்று அதன்எஃகு" (773) எனப்

பேராண்மையைவிடச் சீரியது ஊராண்மை – அருளாண்மை எனப் பாராட்டுகிறார். பகைவரை, இரக்கமில்லாமல் அழிக்கின்ற போரில்

காட்டப்படும் மறத்தைப் 'பேராண்மை' என அறிஞர் கூறுவார்கள். ஆனால் அப்போரில் பகைவனுக்கு ஒரு தாழ்வு – துன்பம் வந்தால், அவனுக்குக் கண்ணோட்டம் — இரக்கம் — காட்டி, அந்த இடையூற்றைப்போக்கி அருள்புரிவது 'ஊராண்மை' என்று சான்றோர் மிகவும் போற்றியுரைப்பார்கள். எனவே பேராண்மையினுஞ் சீரியது அருள்வாழ்வு—ஊராண்மை—என்பதை ஞாலமேதை வள்ளுவரும் வற்புறுத்துவது நனிதெளிவாகும்.

தமிழின் எட்டுத் தொகை நூல்களுள் புறநானூறும், பதிற்றுப் பத்தும் தவிர ஏனையவை அன்புணர்வைக்—காதலைப்—பாடும் இன்ப அருள் நூல்களேயாகும்.

பதினெண் கீழ்க் கணக்கு நூல்களுள் களவழி நாற்பது ஒன்றே போர்பற்றியது. ஏனைய நூல்கள் அறமும், இன்பமும் (ஐந்திணை பற்றியன) நுவல்வனவாகும்.

பத்துப்பாட்டுள் இடையிடை புறப்பொருள் தழுவிடினும் பெரும்பான்மையானவை அறமும் அன்பும் காதலும் பற்றியே பாடுகின்றன. எனவே சங்கத் தமிழ் அருள் தமிழாகக்—காதற்றமிழாக—அறத் தமிழாக— இன்பத் தமிழாகவே இருக்கும் வாய்மை தெளியலாம். தமிழர் அருள் வாழ்வே அன்னார் படைப்புக்களாகப் பொலிவது வாய்மையன்றோ? புறநானூறு, பதிற்றுப்பத்து நூல்களிலும் அருளையும், அருள் வாழ்வையும் அறத்தையும் மிக உயர்த்திப் போற்றியுள்ளனர் தமிழ்ப் புலவர்கள் என்பதையும் நாம் கருத வேண்டும்.

அருளாளர்களாக விளங்கிய கொடைவள்ளல்களையும் வேந்தர்களையும், அன்னார் அருள்-அற-வாழ்வுகளையுந்தானே புறமும் பதிற்றுப் பத்தும் போற்றுகின்றன !

"தமக்கென முயலா நோன்றாள்
பிறர்க்கென முயலுநர் உண்மையானே" என புறம் 182

ஆம் பாடலில் கடலுண்மாய்ந்த இளம் பெருவழுதி அருளாளர் இயல்பையும், அருள் வாழ்வின் இலக்கணத்தையும் திட்பமாகத் தெளிவித்துள்ளார்.

இதே கருத்தை நற்றிணை 186-ஆம் பாடலில்,

"பிறர்க்கென முயலும் பேரருள் நெஞ்சமொடு
காமர் பொருட்பிணி போகிய
நாமவெம் காதலர் சென்றவாறே" என்னுமிடத்து,

பிறர்க்கு உதவியருள் செய்து வாழ்வதற்கே பொருளீட்டத் தமிழர் உழைத்தனர்; வெளிநாடுகட்குச் சென்றனர் என்ற உண்மையைத் தெளிவிக்கிறார்.

அளியியல் வாழ்க்கை ஆஅய் எயினன் என்ற அரிய வள்ளல் 'புள்ளின் காவலன்' எனும் புகழ்ப் பெயரோடு பறவைகளின் தோழனாக-அருளாளனாக-விளங்கினான். இந்த அரிய வரலாற்றுண்மையைப் பரணர் முதலியோர் அகநானூற்றில் குறிப்பிடுகின்றனர். புள்ளினங்கள், காட்டுவிலங்குகள் ஆகியவற்றுக்கு ஊறு செய்யக் கூடாது எனக் குறிப்பிட்ட நாளில்-கிழமையில்-விழா மட்டும் கொண்டாடிப் பேச்சுப் பேசி அதை அக்கணமே மறந்துவிடும் இக்காலத்தில் ஆஅய் எயினனின் 'அளியியல் வாழ்க்கை' வியப்பை யளிக்கும். அந்த வெளியம் நகரத்து வேண்மான் போரில் விழுப் புண்பட்டு இறந்தபின், அவனுடல் மீது கொடுவெயில்படாது, அவன் காப்பாற்றிய பறவையினங்கள் வானிலே பந்தலிட்டது போலப்பறந்து நிழல் அளித்தனவாம்! பறவைகளின் அன்பும், நன்றியுணர்வும் எத்துணை வியக்கத்தக்கது பாருங்கள்! இத்தகைய அருள் வரலாறுகள் தமிழகத்திலேயே தமிழருக்கே இன்னும் அறிவுறுத்தப்படவில்லை. அது ஒரு பெருங்குறை. எயினன் வாழ்வு திரைஓவியமாக, நாடகமாகக், கதையாகப், பாடமாக நாடெங்கும் பரப்பப்படவேண்டும். அருளுணர்வு மங்காமல் வாழ வேண்டுமானால் ஆஅய் எயினன், அதியமான் நெடுமானஞ்சி, பாரி, பேகன், காரி, ஓரி, நள்ளி, நல்லியக்கோடன், மோசிபாடிய ஆய், பண்ணன், நாஞ்சில் வள்ளுவன், குமணன், புள்ளுறு புன்கண் தீர்த்தசெம்பியன், நன்னன், சேர, சோழ, பாண்டிய வேந்தர்கள் முதலியோர் வாழ்வும் வரலாறும் உலகமெங்கணும் மிகப் பெரிய அளவில் முரசறைந்து பரப்பவேண்டும். அப்பணியே எப்பணியினும் சீரிய முதற் பணியாகும்.

'நாம் சேர்ந்துபழகிய அன்பர்களின் துன்பம் களைந்து அருள் காட்டி உதவுவதே அறிஞர்க்கு ஏற்ற செயலாம்' என்று தங்கால் பொற்கொல்லனார் அகநானூறு 108 ஆம் பாடலில் அழகாக வலியுறுத்துகிறார்.

"புணர்ந்தோர் புன்கண் அருளலும் உணர்ந்தோர்க் கொத்தன்று" என்ற பாடலடிகள் மறத்தற்கியலாத மாண்புடையவை. இக்காலத்தில் நண்பர்களே, நண்பர்களுக்கு ஊறு தேடிவிடும் நிலையிருக்கிறதல்லவா! இக்காலத்துக்கு அத்தகையவர்களுக்கு இந்த அரிய 'அறிவுரைமருந்து' மிகவும் இன்றியமையாததாகும்.

இவ்வுலக வாழ்விற்கு வேண்டிய எல்லாப் பொருட்களையும் இயற்கை வரையாது மக்களுக்கு வழங்கியுள்ளது. அவ்வியற்கைப் படைப்புக்களைப் பண்படுத்தியும் பயன்படுத்தியும், புதுப் பொருட்களைக் கண்டுபிடித்து, உலகியலுக்கு உதவியாக்கிக்கொள்ள மாந்தருக்கு இயற்கை அறிவுச் செல்வத்தையும் அருளியிருக்கிறது. ஆகவே இவற்றால் மக்கள் நலமாகவும் இன்பமாகவும் வாழலாம். மக்கட்கு மூன்று பண்புகள் மட்டுமே உணர்வுப் பண்பாட்டால் அமையவேண்டும். அவற்றை மக்கள் முயன்றே பெறவேண்டும். இவ்வுண்மையைப் பரிபாடல், "யா அம் இரப்பவை

பொருளும் பொன்னும் போகமும் அல்ல நின்பால்
அருளும் அன்பும் அறனும் மூன்றும்". (பரி: 4: 79—80)

எனக் குறிக்கிறது. மக்கள் இறைமைத் தகுதிக்கு உயர, 'அருளும் அன்பும் அறமும்' என்ற மூன்றும் நனி இன்றியமையாதது.

இம் மூன்றையும் அடையவேண்டுமானால் மக்கள் அறிவில் கொடுமை இருக்கக்கூடாது. கொடுமையை, மறத்தை முற்றும் அறிவு துறக்க வேண்டும். உலகிலுள்ளவர்கள் தம் குடும்பத்தினர்-உறவினரோடு வேண்டிப் பெறவேண்டியது ஒன்றே: அது தம்மறிவு தீமையை அறியாவண்ணம் பண்படுத்துவதே.

"கடும் பொடும் கடும் பொடும் பரவுதும்
கொடும் பாடு அறியற்க எம்மறிவு எனவே" (பரி: 2-74 : 75)

இந்தக் கீரந்தையாரின் பரிபாடற் கருத்துக்கள் உலகம் இன்று மிக உன்னி ஒழுக வேண்டிய தொன்றாகும்.

அறிவில் சிறந்தவர்கள் தான் கொடுமை புரிவதில்—அழிவுப்பணி புரிவதில்-வல்லவர்களாக இருக்கிறார்கள். இன்றைய அரசியலாளர்கள் பலரும் கல்வியறிவுடையவர்கள் தானே! இன்றைய குண்டு உண்டாக்கும் அறிவியலாய்வாளர்கள் அறிவுமிக்கவர்கள் தானே! இவ்வறிஞர்கள் அறிவிலே கொடுமை குடிகொண்டிருக்கிறது. அதனால் தான் போர் செய்யத்துடிக்கிறார்கள். ஒருவரையொருவர் பகைதது அழிக்க முனைகிறார்கள். ஒருவர் நல்வாழ்வை-இன்பத்தைக் கண்டு பொறாமல் அந்நலத்தை அழிக்கச் சூழ்ச்சி செய்து தீங்கு புரிகிறார்கள் தனிப்பட்டவர்கள் மட்டுமின்றி, கட்சிகளும், அரசுகளும், நாடுகளும் இவ்வாறு பகைக்க. அழிக்கப் பூசலிட முனைந்து விட்டன. இவ்வளவும் அறிவினால் விளையும் அழிவே; அதனால் தான் அறிவில் கொடும்பாடு சேரக்கூடாது எனக் கீரந்தையார் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே அறிவுறுத்தியருள்செய்திருக்கிறார்;

'பகைவர் - நண்பர்' என இரு அணிகளின் செல்வாக்குவளரும் வரை போரும் பகையும் அழிவும் வளர்ந்து கொண்டேயிருக்கும். அதை நீக்கி எலலாரும் உறவினர், எவரும் பகைவரே அல்லர் என்ற உயர்நிலைக்கு உள்ளத்தைப் பண்படுத்த அருள் ஒன்றால் தான் ஆகும். அந்த அருள் ஒளிபெறப் பூங்குன்றனார், "யாதும் ஊரேயாவரும் கேளிர்" என அருட்பாட்டு பாடியருளினார். அந்த அமிழ்த மருந்தொன்றே அனைத்துயிர்களையும் அனைத்துலகையும் வாழ்விக்கும் அருளமிழ்தம்! பூங்குன்றன் புதுப் பாட்டே புத்துலகை ஆக்கும் புரட்சிப்பாட்டு.

அருள் வாழ்வை அளிக்கும் பூங்குன்றன் பாட்டைப் புரிந்து கொள்ள அறிவில் அருளுணர்வு செறிந்திருக்கவேண்டும். அக்கால ஆட்சியாளர்கள் அருளைக் குடையாகவும், அந்த அருட்குடைக்கு அறத்தையே கோலாகவும் பூட்டி அன்பு-இன்பம் என்ற நிழல் அமைய நாட்டை ஆண்டனர். அதே நிலையில் இன்றும்

அறிவியலும் மக்கள் வாழ்க்கையும்

துளசி. பார்த்தசாரதி
புலவர் மாணவன் கரந்தை

உலகம் தோன்றிய நாள்முதல் மனித சமுதாயம் வாழத் தலைப் பட்டது. ஆதியில் மனிதன் நாகரிகமின்றிக் காடுகளிலும், குகைகளிலும் விலங்கோடணைய வாழ்க்கை நடத்திவரலானான். அதன் பின் அன்று அறிவு வளர்ந்தவுடன் இனிது நாகரிகத்தோடு வாழத் தலைப்பட்டான். பின் படிப்படியாக அறிவுவளர நாகரிகமும், ஒழுக்கமும் ஒருங்கே வளர்ந்து இன்று காணும் நாகரிக சமுதாயமாக மாறியது. இத்தகைய சமுதாயம் இன்று அறிவியலில் மிக உயர்ந்த நிலையை எய்தியிருக்கின்றது. படிப்படியாக வளர்ந்த அறிவியல் இன்று மக்கள் வாழ்க்கைக்கு எத்தனையளவு பயன்படுகிறதென்பதைக் இக்கட்டுரையில் காண்போம்:

இன்றைய உலகத்தை அறிவியல் உலகமென்பர். எங்கு பார்த்தாலும் அறிவியல் சாதனங்கள் மலிந்து மக்கள் வாழ்க்கைக்கு

(152-ம் பக்க தொடர்ச்சி)

'அருள் குடையாக அறம் கோலாக இருநிழல் அமையப் பெருநல்லுலகைப் பேணிக்காக்க' உலகநாடுகளும், உலகமன்றும் அருளுணர்வோடு முந்திஞல் அருள் வாழ்வுதழைக்கும். பண்டைத் தமிழர் நல்வாழ்வு-அருள்வாழ்வு-மீண்டும் உலகெலாம் நிறையும்.

'நல்லது செய்தல் ஆற்றீராயினும்
அல்லது செய்தல் ஓம்புமின்'

என்ற புறநானூற்றுப் பொன் கருத்தைப் பூவுலகம் புரிந்தொழுக வேண்டும்.

தமிழ்நாட்டுவாழ்வு அருள் வாழ்வே என்றும், அந்த நல் வாழ்வே அறிவு உடம்பட்ட வாழ்வென்றும், உலகம் தமிழர் அருள் வாழ்வைப் போற்றி ஏற்று ஒழுக வேண்டும் என்றும், அன்பீன் குழவி யருள் என்றும், அறமும் பொருளும் இன்பமும் அருளால் அமைவதென்றும், அருள் யாவர்க்கும் எக்காலத்தும் எவ்வகையிலும் நனி இன்றியமையாதென்றும், அருளுணர்வு மிகுதலே வாழ்வின் நிறை என்றும், யாதும் ஊரே யாவரும் கேளிர், என்ற பூங்குன்றனின் அருளறமே உலகில் இன்பம் தரும் அமிழ்தம் என்றும் இதுகாறும் ஆய்ந்து தெளிந்தோம்.

அன்றுடம் பயன்படுகின்றது. அறிவியலின் ஆற்றலால் இப்பரந்த வுலகம் மிகச்சுருங்கிவிட்டது. அறிவியலின் ஆற்றலால் உலகை ஆட்டிப்படைக்கின்முன் மனிதன் உலகில் பல்வேறு பகுதிகளில் நடக்கும் செய்திகளை அவ்வப்பொழுது அறியவும், தெரியவும் வாய்ப்புக்களும் வசதிகளும் ஏற்பட்டிருக்கின்றன. உலகிலுள்ள மக்கள் தொகையை கணக்கிட்டாலும் அறிவியல் சாதனங்களை கணக்கிட முடியாது. அத்துணையளவிற்கு பெருகியுள்ளது.

மனிதன் வளருகிமுன் அவனது அறிவும் வளருகிறது. மக்கள் சமுதாயம் வளருகின்றது. அச்சமுதாயத்தின் அறிவும் வளருகிறது. இஃது இயற்கை. ஆனல் மனிதன் அறிவியலை ஆக்கத்தைக்காட்டிலும் அழித்தலுக்குத்தான் பெரிதும் பயன்படுத்துகின்முன். உலக மக்கள் அறிவியலின் மகிமையால் எவ்வாறு மகிழ்ச்சியான வாழ்க்கை நடாத்துகின்முர்களோ! எவ்வாறு கடின உழைப்பை மிக எளிதாகக் கொள்கிமுர்களோ! அவ்வாறே உலகம் மிக எளிதாக அழிவதற்கான வழிவகைகளை விஞ்ஞானம் வகுத்துத் தந்திருக்கின்றது. என்று உலகப்போர் மூளும்? எப்போது நாமெலாம் கூண்டோடு அழிவோம்? என்று உலக மக்கள் ஒவ்வொரு நாளும் கேள்விகள் எழுப்பிக்கொண்டிருக்கின்றனர். இவ்வாறு மனித சமுதாயத்தைப் பயமுறுத்துவதற்குத்தானு இயற்கை அறிவை கொடுத்தது? இதற்குத்தானு மனிதன் அறிவியலை இவ்வளவிற்கு வளர்த்துக்கொண்டான்?

அறிவியலின் திறத்தால் மனிதன் பூமியில் தன் ஆதிக்கத்தை செலுத்திஞன். பின் கடல்மீது செலுத்திஞன். ஆசை இம்மட்டில் விட்டபாடில்லை. விண்வெளியையும் தன்வயப்படுத்தி ஆங்கு சஞ்சரித்துக்கொண்டிருக்கும் கோளங்களின்மீதும் தன் ஆதிக்கத்தை நிலைநிறுத்த வேண்டுமென எண்ணி அதற்காகப் பல கோடிக்கணக்கானப் பணங்களை வீண் செய்கின்முன். இச்செயல் எவ்வளவிற்கு நன்மையைப் பயக்குமென்பதைக் காலம்தான் கூற வேண்டும்.

சந்திரமண்டலத்தில் குடியேறுவதற்கு இன்று பல நாடுகள் போட்டியிட்டு முயன்று வருகின்றன. இதில் வெற்றியென்பது ஓரளவு அமைந்திருந்தபோதிலும் பயன்மிகக் குறைவு. பெருமளவிற்கு திட்டங்கள் தீட்டிப் பட்டங்கள் பிறப்பதுபோன்று விசைக் கருவிகளை விண்ணில் பறக்கவிட்டு வெற்றிக்கண்டாலும் அஃது

வீண்தான். மனிதன் சந்திரனை அடைந்தால் அவன் காணுவது மலைகள் நிறைந்த பகுதி, பள்ளங்கள், கடுங்குளிர், கடும்வெப்பம், முதலியனவாகும். உயிர்வாழ்க்கைக்கு இன்றியமையாதனவாகிய காற்றோ இல்லை. காற்றில்லாக் காரணத்தால் ஒருவர் பேசுவதை ஒருவர் கேட்கவியலாது. இத்தன்மையதான சந்திரனை அடைந்து அதில் யார் கொடிதான் முன் பறப்பது என்ற போட்டியும் பூசலும் எதற்கு? இதற்குப் பல கோடிக்கணக்கான பணங்களை ஏன் பாழ் படுத்த வேண்டும்?

மனித வர்க்கத்தையே வேரோடு அழிக்கக்கூடிய பல பயங்கரக் குண்டுகளை தயார் செய்துக்கொண்டு இன்று பல நாடுகள் ஒன்றை ஒன்று மிரட்டி வருகின்றன. இம்மாதிரி ஒரு நாட்டை ஒரு நாடு மிரட்டுவது உண்மைப் புலி ஒரு நாள் உருவெடுத்து வந்தாற் போலாகும். இம்மாதிரியான அநாகரிகப் போக்கினுக்குத்தானு மனிதன் அறிவியலை வளர்த்துக்கொண்டான்? அல்லும் பகலும் இடைவிடாதுழைத்து பல உண்மைகளை நன்மைக்காக கண்டிபிடித் தனர் அறிஞர்கள். இதனை மனிதன் தீயவழியில் பயன்படுத்து கிறான். ஒருவரை ஒருவர் அழிக்க முற்படுவதுதான் அறிவியலா? அல்லது இதுதான் நாகரிகமா?

மனிதன் ஆற்றலும் அறிவும் நாளுக்குநாள் வளருவது இயற்கை. இவ்வாற்றலையும், அறிவையும் நல்வழியில் பயன்படுத்தலாம். உலகில் ஆங்காங்கு காணப்படும் பாலைகளை சோலையாக்கலாம், வரைகளை வளம் கொழிக்கும் வயலாக்கலாம், உலகிலுள்ள மக்களின் நல்வாழ்வில் அக்கரைக்காட்டி அவர்கள் முன்னேற்றத்திற்கு அறி வியலின் ஆற்றலைப் பயன்படுத்தலாம். பஞ்சத்தைப் போக்கலாம், பசியை அகற்றலாம். இஃது இயற்கையும், நேர்மையுமாகும். இதை விட்டு மாறான வழியில் செல்வது மனிதப் பண்பன்று.

இன்றுகாணும் அறிவியல் உலகம் மிகப் பயங்கரமானது: இந் நிலைமாறவேண்டும். அணு ஆயுத சோதனைகளையும் அவைகளை தயாரிப்பதையும் என்றும் உலகம் முழுமனதுடன் ஒன்றுபட்டு உண்மையாக நிறுத்துகின்றதோ! அந்நாள்தான் மனித இனத் திற்கு பொன்னாளாகும். ஒன்றுபட்டால் உண்டுவாழ்வு.

அரண்தாங்கி

(பொய்கைநல்லூர்)

வித்துவான், சி. கோவிந்தராசனார்.

சோழநாட்டின் தென்எல்லையாகக் குறிக்கப்பெறும் வெள்ளாற்றின் வடகரைப்பகுதியைச் சார்ந்தும் தொடர்ந்தும் வரலாறு கண்ட ஊர்கள்பல இருக்கின்றன. அவற்றுள் ஒன்று பொய்கைநல்லூர் என்பதாகும். இவ்வூர் இப்பொழுது அரண்தாங்கி (அறந்தாங்கி) என்று அழைக்கப்பெறுகின்றது. தஞ்சை மாவட்டத்தில், அறந்தாங்கி வட்டத்தின் தலைநகராகவுள்ள இவ்வூர் ஒருகாலத்தில் ஓரரசுக்குரிய தலைமையிடமாகத் தேர்ந்தெடுக்கப் பெற்றிருந்தது. இவ்வுண்மையினை, இங்கு எஞ்சி நின்று சான்றுதரும் அரண்வகைகளும், பழமையான கட்டிடங்களும், சூழலாகவுள்ள ஊர்களின் பெயர்களும் உணர்த்துகின்றன. திண்மையான மதிலால் வளைக்கப்பட்டுள்ள இவ்வூரில், அரணமைத்தாரின் ஆட்சி நிலைத்து நின்றதாகத் தெரியவில்லை. இன்றியமையாத நிலையில் இவ்வூரைத் தலைமையிடமாகக் கொள்ளக்கருதிய பிற்காலவரசனொருவனால் அரண்வகை முடிபுபெற்று ஆட்சிவளருங்கால், அவ்வரசனின் குறிக்கோள் நிறைவேறாது பகைவரது சூழ்ச்சிக்கு இலக்காகி இருக்கிற தென்பதை வரலாற்றாராய்ச்சிக்குரியதாக இன்று இங்கு எஞ்சிநிற்கும் சான்றுகளைக்கொண்டு திட்டமிட்டறிய வியலுகின்றது.

இவ்வூரிற்குத் தெற்கே ஐந்துகல்லளவிற்குள் சோழநாட்டின் தென் எல்லையாகக் கொள்ளப்பட்ட வெள்ளாறு ஓடுகின்றது. எனவே, இப்பகுதி சிறப்பாக சோழவரசுக்கும், ஓரொருகால் வலிமிகுந்த பாண்டியவரசுக்கும் உரிய இடமாக இருந்திருக்கின்ற தென்பதை, இப்பகுதியிற் கிடைத்துள்ள கல்வெட்டுச் செய்திகளைக் கொண்டு அறியலாகும். பதினான்காம் நூற்றாண்டிற்குப் பின்னர், பிற்காலச் சோழபாண்டியர் ஆட்சியின் முடிபாக, அரசுகள் சிதறிக் கிடந்தன. அக்காலத்தில் அரசமரபினருள் பலர் பலவாறு நாட்டுரிமையைக் கைப்பற்றி இருந்திருக்கின்றனர். அதன் காரணமாகவே பேரரசுகட்கடங்கிய நிலையில் பரந்துகிடந்த நாடுகள், பல சிற்றரசர்களால் பிரிவு செய்யப்பெற்று அவ்வப்பகுதிகள் தற்காப்புச் செய்யப்பெற்றும், ஆட்சிபெற்றும் இருந்திருக்கின்றன. இத்தகைய நிலையில் அரசவுரிமையைக் கைக்கெட்டிய அளவில் விரும்பிய வல்லானொருவன் தன் முயற்சிக்கு இலக்கான பொய்கைநல்லூர்ப் பகுதிகளைக் கட்டிக்காக்க முற்பட்டுள்ளான். அவன் விரும்பியவாறு தலைமையிடமான பொய்கைநல்லூரரைச் சுற்றிலும் ஆழமான அகழ் தோண்டப்பெற்றது. அகழியை அடுத்துத்தொடர்ந்து திண்மையானதும் உயர்ந்ததுமான மதில் அமைக்கப்பட்டது. மதிலின் இடை இடையே நாஞ்சிற்பகுதிகளும் அரண் புரிசைகளும் வலிமையோடு பொருத்தப்பெற்று மதிலரண் திகழ்ந்தது. பகைவரால் முற்றுகை

ஏற்படும் காலத்தில், கோட்டையினுள் வாழும் மக்கட்கும் மாக்கட்கும் தடையின்றி நீர்கிடைக்க உட்பகுதியில் தொடர்ந்து மூன்று குளங்கள் வெட்டப்பெற்றன. இவற்றை இன்றும் நேரிற்காணலாகும்.

இத்தகைய அங்கங்களோடு நன்கு அமைக்கப்பட்ட அரண், எக்காலத்தில் யாரால் உண்டாக்கப்பெற்றதென்பதைத் திட்டமாக அறிதற்குரிய சான்றுகள் கிடைக்கவில்லையாயினும் பொய்கைநல்லூர் அறந்தாங்கியான நிலையினை அளவிட்டுக்கூறுதற்காம்.

இவ்வூரில் அரண் அமைக்கப்பெறுதற்கு முன்னர் விளங்கிய பகுதி சிவன்கோயிலொன்றேயாம். இக்கோயில் இறையகத்தின் அடிப்படை வரிசைக்கற்களில் தமிழ்க் கல்வெட்டொன்றுளது. திரிபுவனச்சக்கரவர்த்தி கோனேரின்மைகொண்டான் என்னும் அரசனுடைய ஆட்சியாண்டில் இக்கல்வெட்டு தோன்றியுள்ளது. கோனேரின்மைகொண்டான் என்னும் பொதுப்பெயர் பிற்காலச் சோழருள்ளும் பாண்டியருள்ளும் பயின்று வந்திருக்கின்றதொன்றைத்தவிர. சிறப்பாக இன்னார் என்று குறித்தறிய இப்பெயர் இலக்காயிற்றென்று கூறுதற்கில்லை. ஆயினும், இக் கல்வெட்டு பதினொன்று பன்னிரண்டாம் நூற்றாண்டளவில் ஏற்பட்டுள்ள தென்பது வரலாற்றறிஞரின் கொள்கைப்படி கூறுதற்காம். இஃதன்றி, கல்வெட்டில் பயின்றுள்ள எழுத்துக்களின் வடிவங்களும் மேற்குறித்த காலத்தினையே கருதிக்கூற இடனாகவுள்ளன.

கல்வெட்டில் இப்பகுதி பறவாற்றுக்கூற்றத்துப் பொய்கை நல்லூர் என்றும், கோயிலில் எழுந்தருளியுள்ள இறைவன் சோமீசுவரமுடைய நாயனார் என்றும் குறிக்கப்பட்டுள்ளது. கோயில் சிறிய அளவுடையதாயினும் அமைப்பில் உயர்வுடையது. அரணுக்கு உட்புறமுள்ள குடிநீர்க்குளத்தின் கீழ்கரையில் அமைந்துள்ள இக் கோயிலின் தோரணவாயில் கோபுரத்தோடு கூடியதாகவுளது. உள்ளே திருச்சுவரின் நடுவே உயர்ந்தபாங்கில் சிறிய அளவில், கருவறை முகமண்டபம் மகாமண்டபம் படிக்கட்டு என்ற அங்கங்களோடு கோயில் விளங்குகின்றது. கல்வெட்டு கருவறையின் மேற்குப்புறத்தில் வெட்டப்பட்டுளது.

கல்வெட்டு

1 ஸ்ரீ திரிபுவந சக்கரவத்தி கொனெரிந் மெகொ......... புறவாற்றுக் கூற்றத்துப் பொய்கை நல்லூற் திரு சொமீஸ்வரமுடைய நாயனார் தெவதானம்,

2 வூரிலொன்பதிலிரண்டு பத்து மாக்காணி நிலந்திருச்சென்னெல் நடைப்புறமாய காராண்மையாகச் சொல்லிக் கல்வெட்டுப்படி கொடுவந்து காட்டின.........

3 றுத்து இவ்வூரந்தராயமும் வினியொகமும் மற்றும் எப்பெயர்ப் பட்டனவும் அமத்துகளுக்கும் மடப்புறமாகக்கைக்கொண்டு இவ்வாண்டு முதல் இப்படியனுபவிக்க இப்படிச் சந்திரா தித்யவ ... செல்வதாக ... ...

இக்கல்வெட்டினைக் கொண்டு, இவ்வூரின் பழம்பெயர் பொய்கை நல்லூரென்பது புலனாகின்றது. இக்கல்வெட்டுத் தோன்றிய காலத்திற்குப் பின்னரே இப்பகுதி தனியாட்சிக்குரியதாக அரண் செய்யப்பட்டிருக்கின்றது. பொய்கைநல்லூர் போன்ற நாட்டு எல்லைப்பகுதிகள் உரியாரிடத்தும் மாற்றாரிடத்தும் ஆட்சிமாறி நிற்கும் நிலையினைப் பெறுவதால், சிதைந்தும் குறைந்தும் எழுந்தும் புதுப்பிக்கப்பெற்றும் அழிந்தும் இருப்பது இயல்பேயாம். இக் கருத்துப்படியே பகைவருடைய வெறியாடல்கட்கிலக்காகிய பொய்கை நல்லூர், சிதைந்தும், குறைந்தும், நின்றது. இடிபாடுகளுடன் ஊரினை வளைத்து நின்ற அரண் வகையினைத்தவிர மற்றைய சின்னங்களெல்லாம் காலப்போக்கில் அழிந்துபோயின. ஆட்சி யின்றி அரண் சூழ்ந்து நின்ற ஊரினை மக்கள் அடையாளமிட்டு வழங்கத்தொடங்கினர். அதுவே "அரண்தாங்கி" என்னும் பெயராகத் தொடர்ந்தது. எனவே, முன்னிருந்த பொய்கைநல்லூர் என்னும் பெயர் மறைந்து. மக்கள் அடையாளமிட்டு வழங்கிய அரண்தாங்கி என்ற பெயரே நிலைபெறுவதாயிற்று. (அரண்தாங்கி என்ற பெயரே இன்று அறந்தாங்கி என்று திரிந்துளது.)

சோழநாட்டின் எல்லைப் பகுதியாகிய இங்கு பிற்காலத்தில் தனியரசொன்று வலியுடன் சிலகாலம் நன்முறையில் வளர்ந்து வந்திருக்கின்றதென்பதையும், பின்னர் பகைவரால் திட்டமுடன் அழிககப்பட்டிருக்கின்றதென்பதையும், அரண்தாங்கியைச் சுற்றிலும் ஐந்தாறு கல்லளவில் சூழ்ந்து நிற்கும் சிற்றூர்களின் பெயர்களைக் கொண்டும் சின்னங்களைக்கொண்டும் அறியவியலுகின்றது. அவற்றுள் எமது ஆராய்ச்சிக்கு உட்பட்ட ஊர்களின் பெயர்கள் :-

அத்தாணி, அழியாநிலை, ஆளப்பிறந்தான், இடையாறு, எரிச்சி, உருவணி, தாந்தாணி, மூக்குடி, பாக்குடி, கோங்குடி. பூவத்தகுடி, நற்பவழக்குடி, ஆமான்குடி, சிலட்டூர், குறும்பூர், பச்சலூர், பஞ்சாத்தி, குன்னகுறும்பி, கூத்தாடிவயல், வைரிவயல், கொல்லன்வயல், தொழுவன்காடு, காயக்காடு, சுனையக்காடு, பட்டவன்காடு, புதுநிலைப்பட்டி, மேல்நிலைப்பட்டி, கடையாற்றுப் பட்டி, கருவேடர்சேரி; கீழாநிலைக்கோட்டை, எருக்களக்கோட்டை, இரத்தினக்கோட்டை, ஆவணத்தான் கோட்டை என்பனவாம்.

இவ்வூர்கள், ஒருகாலத்தில் நன்னிலையில் இருந்திருக்க வேண்டுமென்பதை, அவ்வூர்ப் பகுதிகளில் காணப்படும் அழிவுகளைக் கொண்டும், ஆங்காங்குகிடக்கும் சிற்பங்களுடன் சிதைந்து நிற்கும் கட்டிடவகைகளைக்கொண்டும் அறியமுடிகின்றது. இப்பகுதியில் ஆய்வுக்குரியதாக அமைந்தஇடம், அழியாநிலை என்ற சிற்றூர்க்குத்

தெற்கே வெள்ளாற்றின் வடகரையைச் சார்ந்து நெடிதாகப் பரந்து கிடக்கும் பரம்பேயாகும். இப்பகுதி பகைவராலே அன்றிப் பிறவாறே அழிவுபெற்ற பின்னர், அங்கு வாழ்ந்த மக்கள் குடிபெயர்ந்து நின்ற இடம் அழியாநிலை என்று பெயர்பெற்றது போலும்! அழிவுபெற்ற ஊரின் பெயர் தெரியவில்லை.

இப்பகுதியின் நிலவியற்கை உருக்குப்பாறைப் படிவங்களே யாம். அவ்வியற்கைப் படர்ச்சியின் மேலாக நான்கடிமுதல் ஆறடி யளவில் மண் தடிப்பும் படர்ந்துள்ளது. மண் தடிப்பு மிகுதியாக வுள்ள பகுதியில் இல்லங்கள் இருந்து அழிந்ததற்குரிய அறிகுறிகள் தெரிகின்றன. எங்கு அகழ்ந்தாலும் சுவரிட்ட மண்ணும் கல்லும் பானை ஓடுகளும் நிரம்பியதாகவே இப்பகுதி இலங்குகின்றது. பழமைக்குரிய சான்றுகளுள் சிறந்ததாகக் கருதப்பெறும், உட்புறக் கருமையுடன் வெளிப்புறம் செம்மை நிறமுடையதாக அமைந்த மெல்லிய பானை ஓடுகளுடன், பலவகைத் தாழிகளின் சிதைவுகளும் ஆங்காங்குகிடைக்கின்றன. திருமால் கோயிலொன்றும் சிவன்கோயிலொன்றும் இருந்து மருங்கறக்கெட்டபின்னர் அவற்றில் எழுந்தருளப்பெற்றிருந்த திருமேனிகள் முட்புதர்களில் அங்கொன்றும் இங்கொன்றுமாக நிற்கின்றன. அவற்றின் சிற்ப அமைப்பு, பத்தாம்நூற்ருண்டிற்குப்பின்னர் வளர்ந்துவந்த பாண்டியர்காலச் சிற்பத்திறனை ஒருசார்புடையதாகப் பெற்றிருக்கின்றன. இங்கு அகப்படும் செங்கற்களும் பழமையின் சின்னமாகவே இருக்கின்றன. (இப்பகுதியினைப் பழம் பொருள் ஆய்வுக் கழகத்தார் அகழ்ந்து ஆராய்ச்சி செய்யின் வரலாற்றுண்மைகள் பல கிடைத்தற்காம்) இப்பகுதியில் புதைந்து கிடந்த கருங்கல்லில் கல்வெட்டொன்று உளது. எழுத்துக்கள் தேய்ந்துள்ளதால் எளிதில் படித்தறிய வியலவில்லை.

இப்பகுதியைச் சார்ந்துள்ள பட்டவன்காடு என்னும் பகுதி யுளது. இங்கு திட்டாகவுள்ள அடவியின் நடுவே முதுமரமொன்றின்கீழ் வேலும் கற்களும் நிறுத்தப்பட்டுள்ளன. இங்கு ஒரு காலத்தில் நிகழ்ந்த வரலாற்றில் குறிக்கப்பெருத பெரும்போரில் வீரம் புரிந்து பட்டவனுகிய மறவனுக்கு மக்கள் இட்டுவணங்கிய நடுகற் பகுதியாதலினுல் இப்பகுதி பட்டவன்காடெனப் பெயர் பெற்றது போலும்!

இப்பகுதிக்கு மேற்கே, புதுக்கோட்டைக்குச் செல்லும் பெருவழியைச் சார்ந்துள்ள சிற்றூர் எரிச்சி என்னும் பெயருடையதாகும். இவ்வூர் அரண்தாங்கிக்கு வடமேற்கே ஐந்துகல் தொலைவிலுள்ளதாகும். பகைவரால் தீயிட்டு அழிக்கப்பட்டதனுல் எரிச்சி என்னும் பெயர்பெற்றது போலும்! இவ்வூரிலுள்ள சிவன்கோயிலைச்சார்ந்து மதில்சூழ்ந்ததாக ஒரகலிடமுள்ளது. உள்ளே செல்லுவோமாஞல், தரைமட்டமாகப் பரவியுள்ள இயற்கைப் பாறைத்தளத்தில் அளவோடு அகழ்ந்தெடுக்கப்பட்டு நீர்நிறைந்து நிற்கும் நீண்ட

குழிவுகளைக் காணலாகும். ஐம்பதடி நீளமும், நாற்பதடி அகலமும், ஆறடி குறுக்களவும் கொண்டு நீண்ட சதுரமாய் ஆழ்ந்து செல்லும் பாங்கில் தேங்கிய நீருடன் காட்சிதரும் இக்குழிவுகள் சிந்தைக்கும் காட்சிக்கும் சிறந்ததோர் வியப்பாகவுள்ளன. நீண்ட சதுரமாக வளைந்தமைந்துள்ள குழிவுகட்கிடையே திட்டாக அமைந்துள்ள பாறைத்தளத்திலும் நீளப்போக்கில் நெடிதாகவும் தனித்தனியாகவும் இணைந்த பாங்கில் இரண்டு குழிவுகள் அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன. இடையே உள்ள இக்குழிவுகள் மிக்க ஆழமுடையவைகளென்று கூறுகின்றனர். பஞ்சபாண்டவர் சுனைகளென்று இங்குள்ளவரால் கூறப்பெறும் இக்குழிவுகளிலிருந்து, இப்பகுதிக்கு மேற்கே இரண்டு கல் தொலைவிலுள்ள சுனையக்காடு என்ற பகுதியில் வட்டவடிவில் ஆழ்ந்துள்ள குழிவுகட்கு நிலத்தினூடே சுருங்கை வழித்தொடர்பு உள்ளதென்றும் கூறுகின்றனர். நிலவியற்கை உருக்குப்பாறையாதலினால் அகட்டில் சுருங்கைவழி அமைத்தல் எளிதேயாம். குழிவுகளின் தலைப்பில் செம்மையான படிகள் உள்நோக்கி வெட்டப்பட்டிருப்பதிலிருந்து, இக்குழிவுகள் சுருங்கைவழியின் வாயில்கள் என்பது நன்கு விளங்குகின்றது. அரண்தாங்கியில் ஆட்சிநிலவிய காலத்தில், இப்பகுதியும் சுருங்கைவழியும் மிகவும் இன்றியமையாதவைகளாக இருந்திருக்கவேண்டுமென்பது இச்சுவட்டால் நன்கு புலனாகின்றது. இவ்வுண்மையினைத்தவிர, பஞ்சபண்டவர்க்குரிய சுனையென்பது எவ்வாற்றானும் பொருந்துமாறில்லை. பாண்டிய ராட்சியின் சின்னங்களுள் ஒன்றென்ற தன்மையினாலும், சுருங்கை வழி, பழக்கமின்றி கிடந்ததால் மழைநீர் நிறைந்து சுனைபோன்று காட்சியளிப்பதாலும் இவற்றைப் பாண்டியர் சுனைகள் என்று அழைத்திருக்கலாம். அப்பெயர் காலப்போக்கில் திரிந்து பாண்டவர் சுனையாகியுளது.

அரண்தாங்கிக்குத் தென்மேற்கே எட்டுக்கல் தொலைவிலுள்ள கீழா நிலைக்கோட்டை என்னும் சிற்றூர் வரலாற்றுச் சிறப்புடையதாகவுளது. இங்கு திண்மையான மதில் நெடிதாகச் செல்லுகின்றது. ஒரு சிறந்த கோட்டையமைப்பும் சிதைவுகளுடன் நிற்கின்றது. இவைகளெல்லாம் அரண்தாங்கியின் வரலாற்றுக்குரிய அளவைகளைத்தரும் சின்னங்களேயாம். எஞ்சிய சிற்றூர்களும் இம்முறையிலேயே பழமை நிலவும் இடங்களாகவே இருக்கின்றன.